உ
சிவமயம்

விசேஷ விளம்பரத்திற்கு!

# இந்துசாதனம்

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்

விசேஷ விளம்பரத்திற்கு!

Registered as a Newspaper in Ceylon.
P. M. G. No. H. A. 59/300/of 1939.

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே ஈசனெந்தை யிணையடி நீழலே.

விரோதி வருஷம் (1889) ஆவணிமாதம் 28-ம் திகதி ஆரம்பமானது.

[புத்தகம் ருடு] யாழ்ப்பாணம்:— விஷு வருஷ மாசி மீ உகூ உ (1942 மார்ச் 12 வியாழக்கிழமை) [இலக்கம் கூக]

## வள்ளுவர் வனப்பு

(அண்ணாமலைப் பல்கலைக்கழகம் தமிழ் ஆராய்ச்சி விரிவுரையாளர் திரு. வித்துவான் ஜி. சுப்பிரமணியபிள்ளையவர்கள் M. A. B. L.)

தமிழன்பர்களே!

திருவாசகம் என்னும் தேனிலிருந்து ஒரு துளியை இனிது சுவைப்போம்.

"வணங்கத் தலைவைத்து வார்கழல்வாய் வாழ்த்த வைத்து
இணங்கத்தன் சீரடியார் கூட்டமும் வைத்தெம்பெருமான்
அணங்கொடணி தில்லையம்பலத்தே யாடுகின்ற
குணங்கூரப் பாடிநாம் பூவல்லி கொய்யாமோ"

இதனால், இறைவன் நமக்குத் தலையைக் கொடுத்திருப்பதின் நோக்கம் அவனுடைய வார்கழலை வணங்குவதற்காகவே என்பது போதரும். இக்கருத்துப் பற்றியே வாகீசப் பெருந்தகையும், "தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனை" என்றார்.

"வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும்
தாழ்த்தச் சென்னியுந் தந்த தலைவனைச்
சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே
வீழ்த்த வாவினை யேனெடுங் காலமே"

இவ்விருவருக்கும் மிகவும் நீண்ட காலத்தே தோன்றி நமக்குத் திருக்குறளை அருளிச்செய்த திருவள்ளுவதேவரும் நாம் தலைபெற்றதன் பயன் என்ன என்பதை வெகு அழகாக ஒரு குறளிற் பொறித்திருக்கின்றார்.

"கோளில் பொறியிற் குணமிலவே எண்குணத்தான் தாளை வணங்காத் தலை" என்பது அக்குறள். எவ்வாறு ஐம்பொறிகளுக்கும் கண்டுகேட்டுண்டுயிர்த்து உற்றறிதல் இன்றியமையாதனவோ, அதேபோல், எண்சாண் உடம்பிற்கும் பிரதானமாகிய சிரசிற்கும், இறைவன் தாளை வணங்குதலே வேண்டுவது. சுவையை நுகரவியலாத நாக்கு என்ன நாக்கு? புண்ணுக்குநிகர்தான். "சிற்கைரா, கலப்பைரா, இவையுமுண்டாதலின்" என்பர் அடிபார்க்கு கல்லார். அவ்வாறே, தலைவன் தாளடியில் தாழாத தலை என்ன தலை? தறுதலை. குணமிலவே வணங்காத்தலை, என்றதன் கருத்து ஊக்கத்தறிந்து இன்புறற் பாலது தலையிலிருப்பதென்ன? அதுதான் மூளை; இங்கே நாம் அறிவு என்று கொள்ளலாம்.

"கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்"

என்னும் அருமைத் திருவாக்கிற்கேற்ப, தலைவன் தாளைத் தலை இறைஞ்சினால் அச்செயல் அங்கே நல்லறிவு இருத்தலைப் புலப்படுத்தும். அவ்விதம் வணங்காத தலையில் அறியாமையே குடிகொண்டிருக்கும் என்பதே பொருளாகும். வழக்கிலுங்கூட, அறியாப் பேதை ஒருவனை, "உன் மண்டையில் என்னடா இருக்கிறது? களிமண்ணோ?" என்று கேட்கிறார்கள்.

மேற்கூறிய "கோளில் பொறியில்;" என்னும் குறள் உரையில், பரிமேலழகர், "காணாதகண் முதலியன போல வணங்காத தலைகள் பயனில எனத் தலைமேல் வைத்துக் கூறினாரேனும், இனப்பற்றி வாழ்த்தாத நாக்களும் அவ்வாறே பயனில வென்பதுகொள்க" என்றார். நாக்கு நும் கொள்ளப்படுமேல, உடம்பிலுள்ள ஏனை அங்கங்களையுமே கொள்ளலாமென்பது தேற்றமாகும். அங்ஙனமாயின், ஆண்டவரசுகள் அன்பாயமைத்த திருவங்கமாலை முழுவதும் அக்குறளடியின் ஆழ்ந்த கருத்தாக அமைப்பெற்றிருக்கிறது என்று கொள்வதில் ஒன்றும் இழுக்கில்லை.

'கடவுள் வாழ்த்து' என்னும் அதிகாரத்தில் நாயனார், ஏழு குறள்களில் இறைவனுடைய அடியைச் சிறப்பித்துக் கூறியிருக்கிறார். இது சித்தாந்தக் கருத்துக்களோடு இசைந்தொன்றுகும். பதியின் தாழ்ந்த அங்கமாகிய தாளோடு பசுவின் சிறந்துயர்ந்த அங்கமாகிய தலை பொருந்தி, நாடலைபோலநிற்றலே இம்மனிதப்பிறவியை எடுத்ததாற் பெறும் பயன் என்பது அறிவாளிக்கு ஒப்பமுடிந்த தோருண்மையாகும். ஏனெனில், இறைவன் தாளையே புணையாகக்கொண்டு நாம் பிறவிக் கடலைக் கடத்தல் கூடும்.

"பிறவிப்பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேரா தார்"

இக்குறளடியிற் கண்ட கருத்து அப்பர் திருவாக்கு ஒன்றால் இனிது விளங்கிக் கிடத்தலை நாம் இங்குத் தெரிந்துகொள்ளலாம்.

"துன்பக்கடலிடைத் தோணித் தொழில்பூண்ட தொண்டர் தம்மை
இன்பக் கரைமுகந் தேற்றுந் திறத்தன மாற்றயலே
பொன்பட் டொழுகப் பொருந்தொளி செய்யுமப் பொய்பொருந்தா
அன்பர்க் கணியன காண்க ஐயாறன் அடித்தலமே"

எழுசீர்கள் வாய்பெறும் குறள் வெண்பாவால் யாத்த திருக்குறளின் முதல் அதிகாரத்தில், ஏழு குறள்களில் இறைவன் தாளைக் காண்கின்றோம். வள்ளுவர் வாக்கினின்றெழுந்த தமிழ்மறையில் இரண்டிரண்டு அடியாக வந்துள்ள ஒவ்வொரு குறளிலுமே சிவபெருமானின் திருவடிகளைக் காணலாமென்கிறார் சிவப்பிரகாச சுவாமிகள்.

"என்னடிகள் வெண்குறணோ யிரண்டு
மென்றலைமி திருக்கு மிறை"
(திருவெங்கைக் கலம்பகம்)

ஆக் கற்பனையிற் கைவந்த கவிப்புலவர், திருவள்ளுவரை "என்னடிகள்" என்று பாராட்டுகின்றார். ஒவ்வொரு குறளும் முதலடி நான்கு சீராய், இரண்டாவது அடி முச்சீராக, இரண்டடிகளையுடையது. அவ்விரண்டடிகளும் சிவபெருமானுடைய இரண்டடிகளையும் ஒக்கும் என்பதே துறைமங்கலம் சுவாமிகளின் கருத்து. எவ்வாறு இவ்வுவமை பொருந்தும் எனின் கூறுவாம். திருக்குறளடி இரண்டில், ஒன்று நாலு சீர்த்தாய் நீளமான அடி, மற்றொன்று முச்சீர்த்தாய்க் குறுகலான அடி. இவ்விதமே சிவபெருமான் திருவடிகளுள் ஒன்று மற்றொன்றை விடக் குறுகிய அடியாகவே காணப்படும். முதலதாகிய நீண்ட அடியை, வலப்பக்கத்து அத்தனது அடியாகவும் சிற்றடியை இடப்பக்கத்தான அம்மையது அடியாகவும் ஒப்புநோக்கி உளங்குளிர்ந்து போற்றிய சுவாமிகளின் கவிவன்மையை உணரும் சைவர் ஒவ்வொருவரும் உள்ளமுருகி மெய்யவசமாவர் என்பது ஒருதலை. இங்கு சிவப்பிரகாசர், சிவன் உமையொடு கூடி விளங்கும் காட்சியைத் திருவள்ளுவர் நூலின் ஒவ்வொரு குறளிலும் கண்டுகளிக்கிறார். இதை நான் அறிந்தநாள் முதற்கொண்டு திருக்குறளைப் படிக்கும்போதும், காணும்போதும், நினைக்கும்போதும், எனக்குச் சிவபெருமானின் அர்த்தநாரீசுவர வடிவமும், அதைக் குறித்து அப்பர் பாடியுள்ள பாடலொன்றும் மனக்கண்முன் தோன்றிக்கொண்டிருக்கின்றன. அப் பாடல்,

"புதுவிரி பொன்செய் யோலை யொருகா தொருகாது சுரிசங்க நின்றுபுரள
விதிவிதி வேதகீத மொருபாடு மோத வொருபாடு மெல்ல நகுமால்
மதுவிரி கொன்றை துன்று சடைபாக மாதர் குழல்பாக மாக வருவர்
இதுவிவர் வண்ண வண்ண மிவள் வண்ண வண்ண மெழில் வண்ண வண்ண மியல்பே"

என்னும் திருநாவுக்கரசின் தேவாரமாகும். சிவப்பிரகாசர் இவ்விதப

தொடர்ச்சி 4-ம் பக்கம்

## கொள்ளையடித்தல்

கவிந்த முயலடிப்போருப வெந்த வீட்டிற் பிடுங்குவோருப எந்த நாட்டிலும் உண்டு தான். நாட்டுக்கு ஆபத்து வந்திருக்கும் வேளைதான் நாய், நரி, கழுகு முதலியவைகளைப் போலப் பிறருடைய சொத்தைப் பிடுங்கி தினனும் எளியவர்களுக்கு மிகவும் வாய்ப்பான காலமாகும். இப்படிப்பட்ட கோழைகள், சத்துருவின் விமானப் படையெடுப்புக்குப் பயந்து தற்காலிகமாகத் தங்கள் வீடுவாசலை விட்டுப் பிறவிடங்களுக்கு வெளியேறிச் சென்றிருக்கும் அயலவர்களுடைய வீடுகளினுள்ளும் புகுந்து கொள்ளையடித்து விடுவார்கள். இவ்விதமான ஆபத்து வேளையிலே, இவர்களைத் தவிர, வசதி வாய்ந்திருப்பதனாலே தங்களை மறந்து ஆசைக்கிடங்கொடுத்து நடக்கும் வெள்ளை வேட்டிக்காரரும் மூடரும் கொள்ளையடிக்க முற்பட்டு விடுகின்றனர். இவர்களிருவருக்கு மிடையே வித்தியாசம் பாராட்டுதல் பெரும் மூடத்தனமாகும். திருட்டுப்போன பொருள் அற்பமானாலுஞ் சரி பெரிதானாலுஞ் சரி கொள்ளை கொள்ளையே.

ஆகையினாலே நாட்டின் ஆபத்து வேளையிலே தங்கள் தங்கள் அயலவருடைய வீடுகளையும் சொத்துக்களையும் சாத்தையுடன் பாதுகாத்தலும் பாதுகாத்தற்குக் கருவியாயிருத்தலும் ஒவ்வொருவரையும் பெறுதற் பெருங் கடனாகும். அவர்கள் தங்கள் அயலவருடைய அசைவுள்ள சொத்துக்களை ஒன்றில் பொலிசருடைய பாதுகாப்பிற் சேர்த்துவிடலாம் அல்லது அரசினரால் இதற்கென ஒதுக்கப்பட்டிருக்கும் இடங்களிற் சேர்த்து விடலாம்.

சொத்துக்களைப் பாதுகாத்தற்கு சில பிரமாணங்கள் விதிக்கப்பட்டிருக்கின்றன. அவைகளை மீறி நடப்பவர் கண்டிப்பாகத் தண்டிக்கப்படுவர். அந்தப் பிரமாணங்கள் 29-1-42 (வியாழக்கிழமை) வெளிவந்த 8,854 ம் இலக்க (விசேஷ) அரசாங்க 'கெஜற்' பத்திரிகையிலே பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன.

அவை பின்வரும் குற்றங்களைப் பற்றிக் கூறுகின்றன:-

விமானப்படை மூலமாகவேனும் பிற வழிகளாலேனும் பகைவராலே தாக்கப்பட்ட பிரதேசத்திலிருந்தாவது தேசாதிபதியின கட்டளையினாலே ஆந்தப் பிரமாணம் செலுத்தப்பட்டு வரும் பிரதேசத்திலிருந்தாவது யாராயினு மொருவர்—

A பகைவராற் சேதமடைந்த ஸ்தலத்திலேனும், பகைவருடைய தாக்குதலினாலே காலி செய்யப்பட்ட ஸ்தலத்திலேனும், பகைத் தாக்குதலை எதிர்க்கும் பொருட்டாவது தடை செய்யும் பொருட்டாவது அதிகாரிகளுடைய கட்டளையினாலே காலி செய்யப்பட்ட ஸ்தலத்திலேனும் உள்ள பொருளையாவது, பாதுகாப்பு வேலையில் விடுபட்டிருப்போது பொருளையாவது தாக்குதலினால் ஆபத்துக்குள்ளான பொருளையாவது திருடுவாராயின், அல்லது

B போர் முயற்சியினாலே பாதுகாப்பில்லாமற் கிடக்கும் பொருளைத் திருடுவாராயின் அல்லது

C யாதாயினும் தண்டிக் கூடிய குற்றத்தைச் செய்யும் நோக்கத்துடன் ஒரு ஸ்தலத்திலுள்ளே புகுதலாலும், யாதாயினுமொரு பொருளைச் சேதப்படுத்தினாலும், யாரையாவது தாக்கினாலும், தாக்கக்கூடிய ஆயுதங்களையாவது வெடிக்கக் கூடிய கருவிகளையாவது வைத்திருந்தாலும்,

அவர் இந்தப் பிரமாணத்தை மீறிக் குற்றஞ் செய்தவராவர். அவர் சுப்ரீம் கோட்டிலே குற்றஞ்சாட்டி விசாரிக்கப்பட்டு மரண தண்டனைக்கேனும் ஜீவிய காலம் முழுவதும் ஊழியம் செய்யும் தண்டனைக்கேனும் ஆளாவர். அல்லது சிறு கோட்டு நீதவான (மாஜிஸ்திரேற்) முன்னிலையிலே விசாரித்துக் குற்றவாளியெனக் காணப்பட்டால் ஒரு வருஷத்துக்கு மேற்படாத சிறைத் தண்டனைக்கு ஆளாவர்.

இந்தப்பிரமாணங்கள் தேசாதிபதியாலே குறிப்பிடப்பட்ட எந்தப்பிரதேசத்திலும் செலுத்தப்படும். விமானப் படையாலே தாக்கப்பட்ட எந்த இடத்திற்கும் இவை உடனே செல்லுபடியாகும். கொலைக் குற்றத்திற்கு விதிக்கும் தண்டனையே இக் குற்றங்களுக்கும் விதிக்கப்படும் அது நெடுங்காலச் சிறைத் தண்டனையாகவேனும் மரண தண்டனையாகவேனும் இருக்கும். தண்டனைகளின் கடுமையைப் பற்றி நாம் அதிகம் வற்புறுத்திச் சொல்லிக்கொண்டிருக்க வேண்டியதில்லை. ஆனால் நாட்டிலுள்ள மக்கள் ஒவ்வொருவரும் நன்கு உணர்ந்து கொள்ள வேண்டியது ஒன்றுண்டு. அது என்னவென்றால், கொள்ளையடித்தலுக்கும் அதைப் போன்ற பாரதூரமான பிற குற்றங்களுக்கும் நீதிபரிபாலனம் நாட்டின் க்ஷேமம் என்னுமிரண்டையுங் கருதி மிகவும் கடுமையான தண்டனை விதிக்கப்படும் என்பதேயாம். இவை எவ்வளவோ பாரதூரமானவை.

சொத்துக்களைப் பாதுகாத்தற்குப் பொலிஸ் பகுதியார் திட்டம் வகுத்துவருகின்றனர். பொலிஸ் படை தக்கவாறு பலப்படுத்தப்படும். இரவுபகலாக விழிப்புடன் காவல் புரியமாறு அவர்களுக்குக் கட்டளை பிறப்பிக்கப்படும்.

ஆகையினாலே கொள்ளையடிக்கவினாலே உங்கள் சொந்த நாட்டினருக்கு சத்துராக்களும் பகைவருமாகாதிருங்கள்.

J. N. A. 10729—20,000 (2/42)

## ஈழநாட்டு ஆசைவாணிகளின் இன்னிசை விருந்து

கானாஞ்சித சபை ஆதரவில் 7-3-42 மாலை 8 மணி தொடக்கம் அளவெட்டி மகாஜனசபை மண்டபத்தில் ஓர் மனோகர சங்கீதக் கச்சேரி நடைபெற்றது. யாழ்ப்பாணத்தின் பல பாகங்களிலிருந்து ஆண் பெண் இருபாலாரும சமுகமளித்தனர். இழநாட்டு இசை ரசிகர்களால் பெரிதும் மதிக்கப்படும் சங்கீதத்திறமை வாய்ந்த பெண்மணிகள் நிகழ்ச்சிகளிற் பங்குபற்றினர். குமாரி ரதி சுந்தரம்பிள்ளை தம் மழலை ததும்பிய கானத்தினாற் சபையை மகிழ்வித்துக் கச்சேரியை ஆரம்பித்தார். செல்விகள் ஜெகதாம்பிகை ராமநாதன், குஞ்சிதம் சுந்தரம்பிள்ளை, புஷ்பம் கணபதிப்பிள்ளை, பாஞ்சோதி ராமசாமி ஆகியோர் தங்கள் இனிய சாரீரத்தினாலும், கலைஞானத்தினாலும், மதுரகானத்தினாலும் உணர்ச்சிப்பிரவாகத்தை ஊட்டிச் சபையைச் சங்கீத சாகரத்தில் ஆழ்த்திவிட்டனர். செல்விகள் குஞ்சிதம் சுந்தரம்பிள்ளையதும் புஷ்பம் கணபதிப்பிள்ளையதும் கூட்டு வயலின் வாசிப்பு மிகவும் மெச்சப்பட்டது. மண்டபத்தின் அமைப்பும் வித்வான் பிரமஸ்ரீ N. லட்சுமி நாராயண ஐயர் அவர்களதும் திரு. க. சண்முகானந்தம் அவர்களதும் வயலின் திறமையும் திரு. தங்கம் அவர்களின் மிருதங்கமும் பொருத்தமான முறையில் கச்சேரியின் உன்னத நிலைக்கு உதவிபுரிந்தன. இச்சந்தர்ப்பத்தில் ஐபரவர்களின் கௌரவ சேவையும் பாராட்டி ஆர்வமும் குறிப்பிடத்தக்கன. சபையின போஷகர் ஆசிரியர் திரு. தி. செல்வத்துரை அவர்கள் யாவர்க்கும் நன்றி கூறினர். அப்பொழுது கச்சேரியை இவ்வளவு திறம்பட நடத்திய கானாஞ்சித சபைச் செயலாளர் திரு. பொ. நல்லையா, திரு. சு. ஆறுமுகம் அவர்கள் யாழ்ப்பாண நாட்டில் சங்கீத அபிவிருத்திக்குச் செய்து வரும் தொண்டைப் பாராட்டினர். கச்சேரி இரவு 11 மணிக்கு இனிது நிறைவெய்தியது. —கடிதம்

## தொண்டைமானாறு செல்வச் சந்நிதி சுப்பிரமணியசுவாமிகள் மகாசங்காபிஷேகம்

நிகழும் விஷு வருஷ பங்குனி மீ 5-ந் உ (18-3-42) புதன்கிழமை காலை மகாசங்காபிஷேகமும் அன்றிரவு கர்ப்பூரத் திருவிழாவும் நடைபெறும். —கடிதம்

## சிராத்த காலத்திலே எள்ளும் தண்ணீரும் இறைத்தல் முதலிய கருமங்கள் செய்தற்கு நியாயமும் பிறவும்

பிரம்மஸ்ரீ. ச. பொன்னுஸ்வாமிக் குருக்கள் சுதுமலை

பிதா, மாதா, பிதாமகர், பிரபிதாமகர், மாதாமகி, பிரபிதாமகி, காருண்ணிய பிதிரர், ஆகிய எழுவர்க்கும் பந்துக்கள், குரு, குருபத்தி முதலியோருக்கும் இறந்த பின்பு தேவகணத்தினபாற் பட்டுளரேல், அக்கினி காரியஞ் செய்தலினாலும், அசுரர் பாற்பட்டுளரேல் தக்ஷிணை கொடுத்தலினாலும் மானுடர்பாற் பட்டுளரேல் போசனங் கொடுத்தலினாலும், பைசாசத்தினபாற் பட்டுளரேல் காகபலியினாலும், அன்னதானத்தைச் சிதறுதலினாலும். யமனுலகினபாற் பட்டுளரேல் பிண்டம் போடுதலினாலும், நரகத்தினபாற் பட்டுளரேல் தில தருப்பணஞ் செய்தலினாலும் திருப்தி அடைவார்களெனவும், பிதா மாதாக்களுக்குப் பிள்ளைகளே நீங்கடன் நீக்கடன்கள் செய்தல் வேண்டுமெனவும். புத்திரனில்லாதவர்கட்கு,

"துவைத்தருஞ் சீர்ப்புத்திரன் நன்மனைவி மகளன்பு
கூரவுடன் பிறந்தா னிங்குரைத்த இவர் மைந்தர்
கூறுபிதா தாயரிப மருமகளோ சங்கனபு
மலிவு சகோதரிய வடன் புதல்வன நட்சபிண்டர்
வீறுசமானோ தகா தாய சபிண்டர் சோதகர்
மெய்ப் புதல்வர் சீடனைச்சன சனயன குரவன் கொண்ட
பேறுபெறு மருகன் பார் கோழுனட லரசன்
பேசுமிவ ரென்றறிக பிறங்கிவரி லுண்மை
ஏதறு பிரதானன் புத்திர னொழிந்தோ ரெல்லாஞ்
சேரி ஏண்டாம் பிரதான ரென வறிக தெளிக்கே."

இந்த இருபதின்மருள்ளே மனைவி மாத்திரம அமந்திரமாகச் செய்தல் வேண்டும்.

இறக்கும்போது கோதான முதலிய தானங்கள் செய்வதால் அபிமானித்திருந்த உடம்பை விட்டுப் போம்போது தேடிய பொருள்களைச் சற்பாத்திரங்களுக்கு ஒப்படைத்துப் போகுதல் மரபாகலானும், இயமவழி வழிநடை வேதனைகள் நீங்கும் பொருட்டேயாம். சிவானுக்கிரகம் பெறும் பொருட்டுத் தேவார திருவாசக முதலிய காதில் கேட்கும் பொருட்டு ஓதுதலும், இறந்தபின் தேகம் சிவாக்கினியில ஒடுங்கச் செய்யச் சத்தியாகும் பொருட்டுச் சூர்ணோதலவமும், அத்தேகஞ் சிவாக்கினியிலாமஞ் செய்ய சிவரூபமாம் பொருட்டாம, தீக்கைவழியினால் வரும் தேச, கால, மந்திரக்கிரியா லோபம் நீங்கும் பொருட்டு அவ்வத் தீக்கைக்குரிய பிராயச்சித்தமாக அந்தியேட்டியும், வெப்பம் நீங்கும் பொருட்டுக் காடாற்றலும் நிர்வாணம் நீங்கும் பொருட்டு நக்கினதானமும், ஆகாரம் கொண்டு தந்த குற்ற பொருட்டுப் பாஷாணதாபனமும்; தாக உஷ்ணம் நீங்கும் பொருட்டு வாம்சாதக, திலோதக, குசோதக தருப்பணங்களும், உணவின பொருட்டுப் பிண்டமும், சாதிகம் நீங்க வழிக்கை வரும் பொருட்டு நவசிராத்தமும்; தாபணம் எண்ணுக கணக்கான ஏகோத்திஷ்டமும், (தொடரும்)

## யாவாத்தீவு

(சாமன்லால் என்பவர் எழுதியதன் மொழிபெயர்ப்பு)

இப்பொழுது யப்பானியரால் தாக்கப்படும் யாவாவும் அயலிலுள்ள சுமாத்திரா, போர்ணியோ, வாலி, மதுரா முதலியனவும் முற்காலத்திற் பாரதகண்டத்தோடு தொடர்புடையனவாகும். இக்காலத்தில் ஒல்லாந்தர்கட்குரியனவாகிய இத்தீவகங்கள் அக்காலத்தில் இந்தோனேசியா எனவும் தொகுத்து வழங்கப்பெற்று வந்தது. தென்னிந்தியாவையாண்ட சோழமன்னர் முற்காலத்தில் இந்நாடுகளையும் ஆண்டு வந்தனர்; மாபாலி பென்னுந் தீவிலுள்ள சனங்கள் இன்றும் இராமாயண பாரதச் சரித்திரங்களை நாடகமாக நடித்து வருகின்றார்கள். இக்காலத்தில் இராசாக்களென்றும் சுல்தான்களென்றும் இஸ்லாம்மதத்தை அனுசரித்திருக்கும் தலைவர்கள் இந்துக்கள் செய்யும் கிரியைகள் திருவிழாக்களைச் செய்தலைக் காணலாகும். இந்நாடுகள் புராணேதிகாசங்களில யவனதேசமென எடுத்துக் கூறப்பட்டன.

### ஒல்லாந்தர் பரிபாலனம்

ஒல்லாந்த கிழக்கு இந்திய தீவுகளுள் யாவாவே பிரதானமானது; இந்திய நகரத்தின் பெயரையுடையதாகிய மதுரா என்னுந் தீவோடு சேர்ந்து யாவா 50745 சதுரமைல் பரப்புடையதாகும். உலகம் முழுவதிலும் யாவாவே அதிககுடிசனஞ் செறிந்துள்ள தெனச் சொல்லப்படும்; சென்ற 1940-ம் ஆண்டில் எடுத்த சனத்தொகையின்படி ஐந்து கோடிக்கு மேற்பட்ட சனங்கள் அங்குள்ளனராம். அவர்களுள் இரண்டு லட்சம்பேர் ஐரோப்பியர்; பத்து லட்சம்பேர் சீனரும் அராபியருமாவர்; இந்திய கடைக்காரரும் சிலர் அங்கே இருக்கிறார்கள். ஒல்லாந்த கிழக்கு இந்திய தீவுப் பரிபாலனத்தில் யாவாவும் மதுராவுமே பிரதானமான தானங்களாகும்; இவை இரண்டுஞ் சேர்ந்து மேற்கு யாவா என ஒரு மாகாணமாகத் தொடுக்கப்பட்டுள்ளன; மேலும் இவைகள் 13 தானங்களாக வகுக்கப்பெற்றுள்ளன; ஒவ்வொரு தானங்களுக்கும் ஒவ்வொரு தானிகர் உளர்; ஒல்லாந்த கிழக்கு இந்திய தீவுகளின் தேசாதிபதி பத்தேவியாவில் இருக்கிறார். ஒல்லாந்தருடைய ஆளுகையில் சிற வித்தியாசம் பெரிதும் பாராட்டப்படுகிறது. ஐரோப்பிய குற்றவாளிகளை ஐரோப்பிய சாதியைச் சேர்ந்த நீதிபதிகள் தாம் விசாரணை செய்ய வேண்டுமென்ற நியதியுண்டு; கல்வி விருத்தி அந்நாடுகளில் அதிகமில்லையெனலாம். சுதேசிகளுக்கு உயர்தரக்கல்வியூட்ட வொண்ணுதென்பதே ஒல்லாந்தர் கொண்டுள்ள நோக்கம். அந்நாட்டில் அரசினர் பள்ளிக்கூடங்கள் ஆக மூன்றுதானும்; அவற்றிற் கல்வி பயிலும் பிள்ளைகளின் தொகை 641. இது 1932-ம் ஆண்டில் எடுத்த கணக்கு. ஒல்லாந்த கிழக்கு இந்திய தீவுகளின் தலைநகராகிய பத்தேவியாவும், செமரங், சாம்பயா, பானடோங், சொகருகர்த்தா, டீயோஜகர்ட்டா என்னுமவைகளை பிரதான பட்டினங்களாகும். ஒல்லாந்தருக்குரியனவாகிய பிரதான பட்டினங்களுக் துறைமுகங்களும் யாவாவிலேயே உள்ளன எனலாம்.

### அங்குள்ள விளைபொருள்கள்

உலகத்திலே இரண்டாவதாக றபர் விளைவைக் கொடுப்பது ஒல்லாந்த கிழக்கு இந்தியதீவுகளென்பர்; பிரேசிலியருக்குரிந்த மலாய் நாடுதானும றபர் விளைவில் முதன்மைபெற்றது. றபர் மரங்களு முதலில் எனனுமிடத்திலிருந்தே முதன் முதல் அங்கே கொண்டுவரப்பட்டதாம்; போர்னியோவிலும் சுமாத்திராவிலும் றபர் அதிகமாக ஆக்கப்படுகின்றது. தேயிலை விளைவு விஷயத்தில ஒல்லாந்த கிழக்கு இந்திய தீவுகள் மூன்றாவதாய் வைத்தெண்ணப்படுவன; இந்தியாவும் இலங்கையுமே இத்தீவுகளைக் காட்டிலும் அதிகமாகத் தேயிலையைத் தருவனவாம். தேயிலை நூற்றுக்கு எண்பது விகிதமான தேயிலை யாவாத்தீவில் ஆக்கப்படுவதென்றும் புகையிலையும் அத்தீவிலே மிகவும் புராதன காலந்தொட்டே ஒருவருவாயென்றும் கூறப்படும். அங்குள்ள அனேக ஊர்களில் புகையிலையும் நெல்லும் மாறிமாறி ஒரே நிலத்தில் விளைவு செய்யப்படுவனவாம். அங்குள்ள மக்களின் பிரதான உணவு நெல்லரிசிச் சோறேயாகும். அத்தீவுகளில் இவையல்லாமல், மண்ணெய், இரும்புப்பாளம், நிலக்கரி, நாகம், பொன், செம்பு, வெள்ளி முதலிய தரைபடு திரவியங்களும் அதிகமுண்டு. சிறுபான்மை ஈயம் வெடியுப்பு, இரத்தினம் முதலாம் பொருள்களும் உள்ளனவாம்.

முற்காலத்திலே தென்னிந்திய சனங்கள் யாவா, வாலி சுமாத்திரா என்னுந் தீவுகளிலும் பசுவிச்சமுத்திரத்திலுள்ள ஏனைய தீவுகளிலும் குடியேறினார்களெனபதற்குப் பல ஆதாரங்கள் உள்ளன. சில தேசச் சரித்திராசிரியர்கள் கூற்றின்படி கிறீஸ்துவிற்குப் பின் 400-ம் ஆண்டில் முதன்முதல் இந்திய அரசர்கள் யாவாத்தீவிலும் தம் இராச்சியத்தைத் தாபித்தனரென அறியக் கிடக்கின்றது. யாவாவிலுள்ள அரசர்களும் சனங்களும் இஸ்லாம் மதத்தவர்களாயிருந்தாரெனிலும் இந்தியர்களுக்கு யாவாத் தீவு பிரதான இருப்பிடமாகவும் அரணாகவும் இருந்துள்ளது. இது 15-ம் நூற்றாண்டிலேயாம். யாவாவிலுள்ள உன்னதமான மலை சுமேரு என்று சொல்லப்படும். வேறு மலைச் சிகரங்கள் அர்ச்சுன, பிரம என்னும் பெயருடன் வழங்குகின்றன. யாவாவிலுள்ள பிரதான நதி செறபா என்று வழங்குகின்றது. இப்பெயர் அயோத்தியிலுள்ள நதியாகிய சரயு என்னும் பெயராகிய திரிபென மதிக்கப்படுகின்றது. யாவாவை யாண்ட மன்னர்கள் பிரபு, பூபதி, ஆரிய, அத்தியட்ச என்னும் வடமொழி நாமங்களோடும் பட்டங்களோடும் வழங்கப்பட்டுள்ளன. இக்காலத்திலும் யாவாவிலுள்ள சனங்கள் சம்ஸ்கிருத நாமந் தரித்தவர்களாக அறியப்படுகின்றனர்.

## டக்றர். எஸ். ஸி. போல் காலமானார்

டக்றர். எஸ். ஸி. போல் சென்ற ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் கொழும்பு "ராவ்மஹால்" என்னும் அவரது இல்லத்திற் காலமானார். அவருக்கு வயசு 70.

அவரது காலத்திற் கீழ்நாடுகளிலேயே மிகவும் பிரபல்யம் பொருந்திய சத்திர வைத்தியர்களில அவரும் ஒருவரென்று அங்கீகரிக்கப்பட்டார். அவர் 1872-ம் ஆண்டு பெப்ரவரிமாதத்திற் பிறந்தார். அவரது தகப்பனர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மிஸ்றர். விலலியம் போல் என்பவராவர்.

## இந்தியாவில் றப்பர்க் கட்டுப்பாடு

### கூடிய விரைவில் ஏற்படுத்த ஆலோசனை

புதுடில்லி, மார்ச், 5—

றப்பரின் உற்பத்திக்காக அதன் வியாபாரத்தையும் உபயோகத்தையும் இந்நாட்டில் மிகவுங் கடுமையாகக் கட்டுப்படுத்த ஆலோசிக்கப்பட்டிருக்கிறது. றப்பரை இந்திய மார்க்கெட்டில் வாங்குவதையும் விற்பதையும் கட்டுப்படுத்துவ சம்பந்தமாகக் கூடிய விரைவில் ஓர் உத்தரவு பிறப்பிக்கப்படும்.

வாழ்க அந்தணர் வானவரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமரனுமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே

இந்து சாதனம்.

யாழ்ப்பாணம் விஷு௵
மாசி௴ உகூ வியாழக்கிழமை

## முந்தியவாறே முடிந்தது

கிழக்குப்பகுதியில் நடந்து வரும் யுத்தம் "பட்டகாலே படும், கெட்டகுடியே கெடும்" என்ற பிரகாரம் இப்பொழுதும் பிரதிகூலமாகவே முடிந்தது; யப்பானியர் ஈப்போ, பினங், கோலாலம்பூர் முதலிய ஊர்களை ஒன்றொன்றாகப் பிடித்த பின்னரும் சிங்கப்பூரில் வந்து தடக்குவார்கள் என்று நாங்கள் அப்பொழுது நம்பியிருந்தோம்; ஆனால், மலாய் நாட்டில் யப்பானியர் படையெடுத்து வந்த நாள் தொடக்கம் எண்ணி எழுபதாம் நாளிலும், பகைவர் சிங்கப்பூரிற் கால் வைத்த ஏழாநாளிலும் சிங்கப்பூர் பகைவர் கைப்படலாயிற்று. அதை முடித்துக்கொண்டு யப்பானியர் யாவாத் தீவையும் பர்மாவையுந் தாக்கலாயினர். தாக்கி பத்தாநாள் யாவாவையும், பன்னிரண்டு வாரங்களில் ரங்கூனையும், அந்தோ! யப்பானியர் கைப்பற்றிவிட்டனர்; மலாய்நாடு சிங்கப்பூர் பர்மா முதலியவற்றைக் கைப்பற்றுதற்கும் ஈனநிலையிற் கிடந்த அந்நாடுகளைச் சிறந்த நிலையில் ஆக்குதற்கும் அந்த நாட்களில் எங்கள் பிருத்தானியர் எவ்வளவு கஷ்டப்பட்டனர்; எவ்வளவுபொருளைச் செலவிட்டன ரென்பதை நேற்று முளைத்த யப்பானியர்கள் அறிவார்களா? ஹொங்ஹொங் தேசாதிபதியும் சிங்கப்பூர்த் தேசாதிபதியுஞ் சிறைப்பட்டனர். ஆனால் யாவாத்தீவிலிருந்த ஒல்லாந்த தேசாதிபதி அவுஸ்திரேலியாவிற்குத் தப்பிப் போய்விட்டார். இவர் தப்பிப்போயது எப்படியென்று இன்னமுந் தெரிவிக்கப்படவில்லை.

உலகத்திலே சிறந்த தத்துவராச்சியங்களென்று சொல்லப்படும் பிருத்தானியரையும் அமெரிக்கரையும் இந்தச்சின்ன ராச்சியமென முன்னே மதித்திருந்த யப்பான் வெல்லுவதென்றால் இது காலத்தின் செயலன்றி வேறல்லவென்றே சொல்லவேண்டும்; இப்பொழுது கிழக்குப் பகுதியில் நடக்கும் யுத்தத்தையிட்டு நினைக்கும்போது கந்தபுராணத்தில் உள்ள திருவிருத்தமொன்று ஞாபகத்தில் வருகின்றது:-

"காடுபோந்தனன் இந்திரன் பொன்னகர் கரிந்து
பாடுசேர்ந்தது சயந்தனும் சிறையிடைப் பட்டான்
நாடில் விண்பதச் செய்கைபிதெம் பிரான் நல்கும்
விடதேயலால் துன்பறும் ஆக்கம் வேறுண்டோ"
என்பதாம்.

அமெரிக்கரைப்பற்றி நாம் அதிகம் சிந்திக்கவில்லை; பிருத்தானியர் விஷயமே அவர்களுடைய விசுவாசமுள்ள பிரசைகளாகிய எங்களுக்குப் பிரதானமானது; இந்தநேரத்தில் பராக்கிரமத்தோடு கூடிய பிருத்தானிய தரைப்படை கடற்படை ஆகாயப்படையென்னு மிம்மூன்றும் ஒன்றிரண்டல்ல, பல யுத்தமுனையில் நிர்வகித்துநின்று பகைவருடன் சமர்புரிந்து வருகின்றன; லிபியாப்பகுதியில் பிருத்தானியப்படை இன்னமும் ஜர்மனியரை விஞ்ச விடவில்லை. தங்கள் சிந்மபூமியாகிய பிருத்தானியாவிலே இடையிடையே தாக்கிவரும் ஜர்மனிய ஆகாயப்படையையும் கடற்படையையும் பிருத்தானிய சைநியம எதிர்த்து யுத்தஞ் செய்து சின்னபின்னப்படுத்திப் பகைவரைப் புறங்கண்டே வருகின்றது. ஆனால் இந்த யப்பான் விஷயத்திலெனிலோ யப்பானியர் பிருத்தானியருடனும் அமெரிக்கருடனும் சமாதானப் பேச்சைப் பேசிக்கொண்டிருக்குஞ் சமயத்தில் காத்திராப்பிரகாரம் போர்க்கறை கூவினர். யப்பானியர் இப்படிச் சதி செய்வரென எங்கள் பிருத்தானியரேனும் அமெரிக்கரேனும் எதிர்பார்த்திருந்திலர். மேலும், தன்னிடத்து முயல், அந்நியஇடத்திலேயுள்ள தந்தியிலும் வலிதென்பர்; ஆனையைச் சலந்தனில் இழுக்கும் அக்கரா, பூனையைத் தரைதனிற் பிடிக்கப் போகுமோ, யப்பானுக்குக் கிழக்கு தேசம் சந்மதேசமாதலால், மேலைத்தேச அரசினராகிய பிருத்தானியருக்குக் கிழக்கே உரியதாயிருந்த ஊர்கள் சிலவற்றை அவர்களுடைய பூரணமான படை இங்கு வந்து சேர்தற்கு முந்தி யப்பான் கைப்பற்றிவிட்டது; இது ஒரு "கெட்டிக"தனமல்ல.

இப்பொழுது யப்பானியர் போய்த் தாக்கியிருக்கும் நாடாகிய அவுஸ்திரேலியாவிலே யப்பானியர் இதற்குமுன் கிடைத்ததுபோல அநுகூலங் கிடைக்குமெனக் காத்திருத்தல் வீணாகும். ஹொங்ஹொங், மலாய்நாடு, சிங்கப்பூர், யாவா, என்னும் ஊர்கள் போலல்ல அவுஸ்திரேலியா; அவுஸ்திரேலியாவிலேயே பராக்கிரமமான படையிருக்கின்றது; அப்படை தம் சொந்தநாட்டைப் பாதுகாத்தற்கு இறுதிவரையில் யுத்தஞ் செய்யுமென்று இப்பொழுது தெரிவிக்கப்படலாயிற்று; "யப்பானியர் எங்களோடு வந்து எதிர்க்கும்போது, நாங்கள் ஒருபோதும் சாண்புகப் போவதில்லை; இறுதிவரையில் நாங்கள் அவர்களுடனே எதிர்த்து யுத்தஞ் செய்தே தீருவோம்" என்று அவுஸ்திரேலிய மந்திரியாகிய மேஜர் ஜெனறல் கோர்டன் பென்னற் என்பவர் இப்பொழுதே தெரிவித்திருக்கிறார். இப்படித்தான் முந்தியுஞ் சிலர் சிற்சில சந்தர்ப்பத்திலே வீரம்பேசினார்கள். பிறகு பிரதிகூலமடைந்தார்கள் என்று சிலர் எண்ணித் தைரியவீனமடையக்கூடும்; அவர்கள் தம் வலியும் மாற்றான்வலியும் அறியாமையினால் அப்படிச் சொல்லிப் பின் இடர்ப்பட்டிருக்கலாம். ஆனால் இந்த அவுஸ்திரேலிய பிரதானிதம்வலியையும் துணைவலியையும் மாற்றார் வலியையும் உள்ளபடிஉணர்ந்தே கூறியிருக்கின்றாரென நாம் கொள்ளலாம்; ஏன்? நாம் முன்னர் எடுத்துக்காட்டியவாறு அவுஸ்திரேலியா பென்னம் பெரிய தேசம். அங்குள்ள சனங்களும் அதிகாரிகளும் சீர்திருத்தத்தோடு கூடியவர்கள்; எவ்வகை யுத்தங்களையுஞ் செய்ய வல்லவர். இவற்றோடு பிருத்தானியரும் அமெரிக்கருந்துணை புரிதற்கும் அவுஸ்திரேலியாவே வசதியான நாடு. ஆனதால் இந்த முப்பாலாரும நெருப்பும் காற்றும் விறகும் சேர்ந்தாற்போல் ஒருங்குசேர்ந்து யப்பானாகிய பெருங் காட்டையெரித்துவிடக் கூடுமென்றும், யப்பானியர் தாம் செய்துவரும அக்கிரமமான யுத்தத்தின் பயனை அவுஸ்திரேலியாவிலே தான் அனுபவிப்பார்களென்றும் நாம் நம்பியிருக்க வேண்டும்.

## ஜர்மனியருக்குப் பிரான்ஸியர் கடற்படை உதவியது

பிரான்ஸிய அதிகாரிகள் தங்களிடத்தில் எஞ்சியிருந்த 50 யுத்தக் கப்பல்களை இப்பொழுது ஜர்மனியருக்குக் கொடுத்துவிட்டனராம்; இவைகளுள் யுத்தத்திற்குரிய பெரியகப்பல்களும் பலவகையான சிறிய கப்பல்களும் உண்டாம். கிளெமென்றிபே என்னும் பாரியயுத்தக் கப்பல் மாத்திரம் 35000 தொன் கொண்டதாம்.

## உலகம் பலவிதக் கதை

(முற்றொடர்)

### தூற்றும் பெண்டிர் கூற்றெனத் தகும்

"அக்கா, நான் முந்தியே உங்களுக்குச் சொன்னேன்; எங்கள் வீட்டுக்காரனுடைய போக்குவாக்கு உலகத்திற்கு மாறானது; நீங்களும் உங்கள் மகனும் எங்கள் வீட்டிற்கு முதன் முதல் வந்து கவலையோடு மீண்டது எனக்குத் திராக்கவலை; எனக்கு மாத்திரமல்ல என் மகன் சுந்தரேசுவரனும் அதையிட்டுக் கவலைப்படுகிறான்; நான் ஒருக்கியானபடியால் அந்த மனுஷனுடனிருந்து இவ்வளவுகாலமும் ஒருவிதமாகக் காலங் கழித்து வருகிறேன்; இன்னொருபெண்ணைப் பிறந்தவளென்றால் அந்த ஆளோடு இருந்து ஒரு நேரந்தானும் குடித்தனம் நடத்தமாட்டாள்; என்ன செய்வேன் "தூற்றும் பெண்டிர் கூற்றெனத்தகும்" என்ற நியாயத்தினால் நான் ஒன்றும் வாய் திறந்து பேசுவதில்லை" என்று சொல்லிச் சிவகாமித்தாய் கவலைப்பட்டாள். "அது சரி, பிள்ளை, நீ நடந்துகொள்ளும் விதந்தான் சரியானது; குலங்குடியிற் பிறந்த பெண்கள் அப்படித்தான் புருஷனோடு நடந்துகொள்ள வேண்டும்; சரி, பிள்ளை; இந்த மத்தியான வெயிலில் நீர் இங்கு வந்ததென்ன; என்று சின்னம்மாள் ஆதரவோடு கேட்டாள்; "வேறொன்றுமல்ல, அக்காள், நீங்கள் ஏதோ அவசியமான தேவையெனக்கண்டுதானே பணம் கேட்டீர்கள்; எனக்காக அவர் செய்த பிழையைப் பொறுத்துக்கொள்ளுங்கள்; இது என்னுடைய காசு, இந்தாருங்கள் இந்தப் பத்து ரூபாவையும் வைத்துச் செலவிடுங்கள்; மறுத்துச் சொல்லாதீர்கள்; அக்காள், எந்த வீட்டிலும் பதிவான வாசற்படியும் உண்டுதான்; அது போவோர் வருவோர் தலையில் இடையிடையே முட்டுவதுஞ் சகசந்தான்; ஆனதால் வேறொன்றும் மனத்தில் நினையாதீர்கள்; கவலைப்படாதீர்கள்" என்று அன்புடன் சொல்லித் தன் மடியிலிருந்த காசு 10 ரூபா நோட்டை எடுத்துச் சின்னம்மாளிடம் சிவகாமித்தாய் நீட்ட அவள் நீட்டுவதை வாங்க மறுப்பது சரியல்லவென்றெண்ணி அதனை ஏற்றுக்கொண்டாள். வாங்கிக்கொண்டு சின்னம்மாள் சிவகாமித்தாயைப் பார்த்து "பிள்ளை, சொல்லுகிறேனென்று குறையெண்ண வேண்டாம்; அவருடைய விருப்பத்திற்கு மாறாக நீர் இந்தப் பணத்தைக் கொண்டுவந்து தருவதும், தர நான் ஏற்றுக்கொள்வதும் முறையல்லவே" என்று சொன்னாள். "அக்கா, அப்படியல்ல, இது என்னிடத்திலுள்ள சொந்தப் பணம்; இதனை நான் ஒரு நல்ல கருமத்திற்குக் கொடுப்பதனால் நான் கணவனுக்குத் துரோகஞ் செய்தவளாகமாட்டேன்; என்னைக் காட்டிலும் வயசாலும் அனுபவத்தாலும் கூடிய உங்களுக்கு நான் அதிகஞ் சொல்லுவது அழகல்ல; காரைக்கால் அம்மையார், தம்வீட்டிற்கு விருந்தாக வந்த சிவனடியவருக்கு, தம் கணவனுடைய அநுமதியின்றி மாங்கனியோடு அமுதூட்டியவரலாறு உங்களுக்குத் தெரிந்ததுதானே" என்று சிவகாமித்தாய் சுருக்கமாகச் சமாதானஞ் சொல்ல, சின்னம்மாள் அவள் சொல்லிய சமாதானத்தையும் கொடுத்த பணத்தையும் ஏற்றுக்கொண்டாள்.

### உற்றவிடத்துச் செய்த உதவி

"தங்கைச்சி, நீராக என் வீடு தேடிக் கொண்டுவந்து பணந்தந்தாகிய இந்த உதவிக்கு நான் செய்யக்கூடிய பதிலுதவி யொன்றுமில்லை; ஆனாலும் என் சிவனுள்ள பரியந்தம் நீர் செய்த நன்மையை மறக்கமாட்டேன்" என்று சின்னம்மாள் கண்களில் நீர் ததும்ப அன்புடன் சொன்னாள். "அக்கா, ஏன் அப்படிச் சொல்லுகிறீர்கள்; இது ஒரு உதவியா? இது நான் செய்யவேண்டிய கடமை; நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படவேண்டாம். ஏதோ, என்னையறியாமல் என் உள்ளம் உங்களிடத்திற் பற்றிக்கொண்டது; நான் சின்னவள்; அல்லாமலும் ஒருவருக்கு வாழ்க்கைப்பட்டவள்; என்னெண்ணமாக அதிகஞ் செய்யமுடியாவிட்டாலும், என்னை உங்கள் சொந்தச் சகோதரமென்று பாவித்து உங்களுக்கு ஏதும் தேவையான நேரத்தில், நீங்கள் எனக்கு ஒருகால் தெரிவித்து விடவேணும், அந்த நேரத்தில் நான் என்னால் இயன்றதைச் செய்யக் காத்திருக்கிறேன்; என்னைப் புறக்கணித்து விடாதீர்கள்" என்று சிவகாமித்தாய் பரிவுடன் சொன்னாள். இந்த அன்பான வார்த்தைகளைக் கேட்ட மாத்திரத்தே சின்னம்மாளின் உள்ளம் வெயிலிடைப்பட்ட வெண்ணெய்போல் உருகியது. "தங்கைச்சி, ஆருந் துணையில்லாது தனித்திருக்கும் எனக்கும் என் பிள்ளைகளுக்கும், தெய்வம் உம்மைத் துணையாகத் தேடித்தந்திருக்கிறது; பிள்ளை, உம்மை நான் அந்நியளாய் மதிக்கவில்லை; புறக்கணிக்க நினைக்கவில்லை, ஆனால் உம்மிடத்தில் ஏதும் உதவியைப்பெற்றால் உமக்கும் அற்ப நன்றிதானும் செய்தற்கு ஏழையாகிய என்னிடத்தில் வகையில்லையே என்பதுதான் எனக்குக் கவலை; நானும் இன்றுதொடக்கம் உம்மை என் சொந்தச் சகோதரமாகவே மதித்து நடக்கத் துணிந்துகொண்டேன்...." என்று இப்படிச் சின்னம்மாள் பேசிக்கொண்டிருக்கும்போது பள்ளிக்கூடத்திற்குப் போயிருந்த சின்னம்மாவின் இரண்டாவது மகனும் இருபெண்பிள்ளைகளும் வீட்டிற்கு மீண்டு வந்தார்கள் "அக்கா, இவர்கள் எங்கே படிக்கிறார்கள்? எந்த எந்த வகுப்பிற் படிக்கிறார்கள்? நேற்று உங்களுடன் கூடிக்கொண்டு எங்கள் வீட்டிற்கு வந்த மூத்தமகன் எங்கே" என்று பல வினாக்களைச் சிவகாமித்தாய் வினவினாள். மற்றைப் பிள்ளைகள் படிக்கும் பள்ளிக்கூடம் வகுப்புக்கள் என்னுமிவைகளைச் சின்னம்மாள் சொல்லிவிட்டு மூத்தபிள்ளையின் கல்வியைப் பற்றிச் சொல்லத் தொடங்குவதற்கிடையிற் பெருமூச்சுங் கண்ணீரும் விட்டாள்.

### தந்தையொடு கல்விபோம்

அதனை அவதானித்த சிவகாமித்தாய் "அக்கா, வருந்தவேண்டாம், உள்ளதைச் சொல்லுங்கள்" என்று நெருக்கிக் கேட்க, "பிள்ளை, என் பிள்ளை கடவுள் கிருபையாக, நல்லாய்ப்படிக்கக் கூடியவன், நல்ல விவேகி, வகுப்பிலே முதலாம்இரண்டாம் பிள்ளையாக நிற்பவனென்று தகப்பனார் சந்தோஷப்பட்டு எனக்குஞ் சொல்லிப் பாராட்டி வந்தவர்; அவரைப் பறிகொடுத்த பின்பும் என் பிள்ளை பள்ளிக்கூடத்திற்குப் போய்ப் படித்துவந்தான்; உணவுக்கும் உடுக்கத் துணிக்கும் ஏதோ என்னால் இயன்றமட்டும் குறைவில்லாமற் பார்த்து வந்தேன்; ஆனால் இப்பொழுது பள்ளிக்கூடத்துச் சம்பளம் கொடுக்கவும் புத்தகம் கொப்பிகள் வாங்கிக் கொடுக்கவும் என் கையிற் பணமில்லை; ஆதலினால் அவன் கிரமமாகப் பள்ளிக்கூடத்திற்குப் போய்ப் படிக்க முடியாமலிருக்கிறான்; அல்லாமலும் அவன் ஒரு அறிவுள்ள பிள்ளையாதலினாலே, நான் படுந்துயரத்தையிட்டுத் தானும் யோசித்துக் கவலைப்படத் தொடங்கிவிட்டான்; தான் படிப்பதை விட்டுவிட்டு எங்கேனும் போய் ஏதும் முயற்சி பார்த்து மாசம் பத்துரூபாவானாலும் என் கையிலே கொண்டு வந்து தரவேணுமென்று நோக்கங் கொண்டுவிட்டான்; அதனை உணர்ந்த நான், கண்ணே அப்படி வேண்டாமடா, நீயாவது படித்துவிட்டால் பிற்காலத்தில் உன் சகோதரங்கட்குத் துணையாயிருப்பாய், நீ இன்னும்படி, நான் ஏதும் தொழில் பார்த்து உனக்குப் படிப்பதற்கு உதவி செய்கிறேன் என்று ஆறுதல் சொன்னேன்; வருகிற திங்கட்கிழமை தொடக்கம் பள்ளிக்கூடத்திற்குப் போவதாகச் சொல்லியிருக்கிறான்; பாவம் என் பிள்ளை என்ன செய்யும், இப்பொழுது வெளியிலே போய்விட்டான், இனி வந்துவிடுவான்...." என்று சொல்லிக் கண்ணீரைத் துடைத்துத் துடைத்துச் சின்னம்மாள் அழுதாள். இந்தப் பரிதாபகரமான வரலாற்றைக் கேட்டுச் சிவகாமித்தாயும் உடன்கலங்கினாள். "அக்கா, நீங்கள் கவலைப்படாதீர்கள், கடவுள் உங்களைக் கைவிடமாட்டார், உங்கள் பிள்ளைகள் படிக்கும் பள்ளிக்கூடத்திலேதான் எங்கள் பிள்ளைகளும் படிக்கிறார்கள். அந்தப் பெரிய பள்ளிக்கூடத்திலே தாய் தகப்பனில்லாத ஏழைப்பிள்ளைகளைச் சம்பளமில்லாமற் படிப்பிப்பார்களாம்; அப்படியான பிள்ளைகள் சிலர் படிக்கிறார்களாம். மேலும் அந்தப் பள்ளிக்கூடத்திலேயுள்ள பெரிய உபாத்தியாயர் நல்ல மனுஷனும்; ஆனதினாலே உங்கள் மகனையும் சம்பளமில்லாமற் படிப்பிக்கும்படி கேட்டால் அவர்கள் சம்மதிப்பார்கள்; புத்தகங்கள் விஷயத்தை நான் பார்த்துக்கொள்ளுகிறேன்; என் பிள்ளை வேறல்ல, உங்கள் பிள்ளை வேறல்ல" என்று அன்புமீதூரச் சொல்லித் தேற்றி விட்டு அவளிடம் அநுமதி பெற்றுக்கொண்டு தன் வீட்டிற்கு மீண்டாள்.

(வரும்)

## "பட்டினசங்கத் தலைவர் இருக்கத்தான் வேண்டும்"

யாழ்ப்பாணம் வரியிறுப்போர் சங்கநிர்வாகக்கூட்டத்தினர்சென்ற வாரம் கூடிய ஒரு கூட்டத்தில் இப்பட்டினசங்கத்தில் இப்பொழுது தலைவராயிருப்பவரை விலகச்சொல்வதற்கு எவ்வகையான நியாயமுமில்லை யென்றும் அச்சங்கத்தில் உள்ள சில அங்கத்தவர்கள் தம் நயங்கருதி அவருக்கு மாறாக வேலைசெய்தமையினாற்றான் அவர்க்கு மாறான நம்பிக்கையினத் தீர்மானம் மேலதிகமான ஒரு வாக்கினால் நிறைவேறியதென்றும் தலபரிபாலன அதிகாரிகள், குறித்த சங்கத்தலைவருக்கு மாறாகக் காட்டுவதற்கு ஏதுக்களுண்டோ என்பதை விளங்கி நிச்சயிக்க வேண்டுமென்றும் சனப் பிரதிநிதியாகவுள்ள சபைத் தலைவரைக் காரணமின்றிப் பதவியை விட்டு விலகச் சொல்வதற்குத் தலபரிபாலனசபையார்க்கு அதிகாரமில்லை யென்றும் கருத்துப்பட ஒரு நிர்ணயத்தை நிறைவேற்றி யனுப்பியுள்ளார்களாம்.

## தேர்தல் ஆட்சேப மனுத் தீர்ப்பின் எதிரொலி

### நீதிஸ்தலத்தில் மிஸ்றர் வ. ஈ. குணசிங்கா

சமீபத்திற் கொழும்பு வடதொகுதித் தேர்தல் ஆக்ஷேபணமனு சம்பந்தமாகத் தீர்ப்புக் கூறப்பட்டதல்லதா? இதையொட்டிப் பிறப்பிக்கப்பட்டிருந்த அறிவித்தலின் பேரில் திருவாளர்கள் வ. ஜே. எஸ். பெறேரா, ஜூலியன் பெர்னாண்டோ, வ. ஈ. குணசிங்கா ஆகியோர் சென்ற திங்கட்கிழமை சுடபிறீம் கோட்டிற்கு வந்திருந்தனர். இலங்கைப் பொதுச்சேர்தரசட்டத்தின்கீழ் மேன்மை தங்கிய தேசாதிபதிக்கு வன் முறைப்பாடு செய்துகொள்ளக் கூடாதென்பதற்கு மிஸ்றர். குணசிங்கா முதலியோர் தக்க காரணங் காட்டக் கூடுமென்று அவர்களின் சார்பாக ஏற்பட்ட வழக்கறிஞர்களால் கூறப்பட்டது.

மேல்விசாரணை வியாழக்கிழமை வரை தவணையிட்டு வைக்கப்பட்டது.

## சிறைக் கைதிகளின் அதிருப்தி

### போதிய உணவு கிடைக்கவில்லையாம்

சிறைக் கைதிகளின் உணவு விஷயம் சமீபத்தில் உள்நாட்டு விவகார நிர்வாகசபையால் ஆலோசிக்கப்பட்டது.

இப்போதைய கட்டுப்பாட்டுத் திட்டத்தின்கீழ்க் கொடுக்கப்படும் அரிசியினால் அறிக்கைகளைத் திருப்தி செய்ய முடியவில்லை யென்றும், அதிக உணவு வேண்டுமென்று அவர்கள் தன்னிடம் முறைப்பாடு செய்துகொண்டிருப்பதாகவும் சிறைச்சாலையின் இன்ஸ்பெக்றர் ஜெனறல் நிர்வாகசபையாரிடம் அறிக்கை செய்திருக்கிறார்.

துறைமுகத்திலும் ஏனைய இடங்களிலுமுள்ள தொழிலாளர்களுக்கு அளிக்கப்படுவது போன்று குறித்த சிறைக் கைதிகளுக்கும் அரிசியைத் தவிர மற்றும் கிழங்கு பயறு முதலியவைகளைச் 'சப்ளை' செய்ய முடியுமா என்பதுபற்றி நிருவாகசபை ஆலோசித்தது. இது சம்பந்தமாக ஏற்படும் செலவு விஷயந்தான் பிரதானமாகக் கவனிக்கப்பட்டது.

கொண்ட்ராக்டர்களுக்கு அனுமதிக்கப்படும் விதித்திற்குட்பட்டே சிறைச்சாலைக் கைதிகளுக்குரிய உணவுப்பொருள்களின் சப்ளைகள் இருக்காக வேண்டுமென்று குறிப்பாக எடுத்துரைக்கப்படுகிறது. இப்போது அநுமதிக்கப்பட்டிருக்கும் விதித்தின்படி கொண்ட்ராக்டருக்கு அவசியமான எல்லாப் பொருளகளையும் வாங்கிக்கொள்ள முடியாது.

எனவே, சிறைச்சாலைக்கு உணவுப் பொருள்களைச் 'சப்ளை' செய்யும் கொண்ட்ராக்டர்கள் இப்போதைய விதித்தில் மேற்கொண்டு கிழங்கு முதலிய உணவுப்பொருள்களைச் சப்ளை செய்யும்படி கேட்டுக்கொள்வதென்று நிருவாகசபை தீர்மானித்திருப்பதாகத் தெரிகிறது.

குறித்த கொண்ட்ராக்டர்கள் பின்னால் இதன் நஷ்டஈடு கோரக்கூடும்.

## கடிதம்

இந்துசாதனப் பத்திராதிபர் அவர்கட்கு!

ஐயா,

எங்கள் சிலருக்கு நேர்ந்த சந்தேகங்கள் சிலவற்றைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகின்றோம்; அச்சந்தேகங்களைத் தாங்கள் விளக்கிவைத்தால் தங்களுக்குக் கடமைப்பட்டவர்களாவோம்.

(1) வண்ணார்பண்ணைச் சிவன் கோவிலில் வருடந்தோறும் பங்குனி மாசத்தில் நடக்கும் மகோற்சவம் இந்த முறை நடவாதெனக் கேள்விப்படுகின்றோம்; இதுமெய்தானா!

(2) அப்படியானால் அதற்குக் காரணமென்ன?

(3) ஏதும் தக்க காரணமில்லாமல் மகோற்சவம் நடத்தாது விடலாமா! நடத்தாமல் விட்டால் அக்கோயிலதிகாரிகளுக்கும் அவ்வூரவர்களுக்கும் கேடு வந்து நேருமென்று பெரியோர் சொல்லுகிறார்களே!

(4) இப்பொழுது அந்தப் பழைய சிவத்தலத்தைப் பரிபாலிப்பவர் யார்!

(5) மேற்படி கோயிலதிகாரிகளிடம் கோயிலுக்குச் சமீபத்திலிருக்கும் தாங்களும், தங்களைப்போன்ற சமயாபிமானிகளும் போய், சண்டை பஞ்சம் முதலாம் பல கேடுகள் நடக்கும் இந்த நேரத்திலே கொடியேறித் திருவிழா நடக்காவிட்டால் ஊரவர்களுக்குஇன்னமும் பெருங்கேடு வரக்கூடுமென்று நியாயத்தைக்காட்டித் திருவிழாநடக்கச் செய்வதல்லவா முறையாகும். அப்படி உங்களாற் செய்விக்க முடியாதா! குறித்த சிவன் கோவிலிற் கொடியேற வேண்டிய தினம் எது!

(6) பழைய தலமாகிய வண்ணார்பண்ணைச் சிவன்கோவிலைப் பின்பற்றியல்லவா இலங்கையிலேயுள்ள மற்றைய கோயில்களிலும் நித்திய நைமித்திகங்கள் நடந்து வருவது! நல்லூர்ச் சட்டநாத சுவாமி கோயில், ஆவரங்கால் சிவன்கோயில், வல்லுவெட்டித்துறைச் சிவன்கோயில், காரைநகர்ச் சிவன்கோயில் முதலிய கோயில்களிலும் இந்தவருடம் கொடியேறி மகோற்சவம் நடக்கமாட்டாவா!

ஐயா,

தங்களைச் சிரமப்படுத்துகிறோமென்று எங்கள்மேற் குறை நினைக்கக் கூடாது. இந்தக் கோயில்விஷயத்தைப்பற்றி அறிய ஆவலாகவிருக்கும் என் நண்பருநானும்வண்ணார்பண்ணையிற் பிறந்துள்ளோம். இங்கே பிழைப்புக்காக வந்திருக்கிறோம். உங்கேயிருக்கும் எங்கள்இனத்தவர்கள் சிவன் கோவிலில் இந்தமுறை கொடியேறித் திருவிழா நடக்கமாட்டாதாமென எங்களுக்குக் கடிதமெழுதி யிருந்தார்கள்; அதனாற் பெருங் கவலைப்பட்டுத் தங்களிடம் இக்கேள்விகளைக் கேட்டு உண்மையை அறிய விரும்பியே இதனைத் தங்களுக்கு எழுதலானோம்; தங்கள் அரிய பத்திரிகை வாயிலாக எங்கள் கடிதத்திற்கு விடை தெரிவித்தால் நாங்கள் மாத்திரமல்லாமல் எங்களைப் போன்ற இங்குள்ள ஏனைய சைவாபிமானிகளும் விஷயத்தை அறிந்துகொள்வார்கள் என்று நினைக்கிறோம்.

இங்ஙனம்,
'அன்பர் சிலர்'

வெள்ளவத்தை,
10.3.42.

### மேற்படி வினாக்களுக்கு விடை:

(1) மகோற்சவம் நடவாதென்பது மெய்தான்.

(2) அதற்குக் காரணம் பலவாறாகச் சொல்லப்படுகின்றது; ஆனால் குறித்த சிவன்கோயில் ஆதீனகர்த்தர் பத்திரிகை வாயிலாகவேனும் விளம்பர வாயிலாகவேனும் வேறு எவ்வகையாலேனும் இங்குள்ளவர்களுக்கு எவ்வகையான காரணத்தைப் புலப்படுத்தவில்லை; ஆனதாற் காரணம் இன்னதென உங்களுக்குத் தெரிவிக்க எம்மாலும் முடியவில்லை.

(3) தக்க காரணமில்லாமல் மகோற்சவத்தை நடத்தாமல் விடுவது மகா பாதகமும் சிவத்துரோகமுமாகும். அப்படி நடத்தாமல் விடுவதனால் அக்கோயில் அதிகாரிகளுக்கு மாத்திரமல்ல, ஊரவர்களுக்கு மாத்திரமல்ல, இந்நாட்டைப் பரிபாலிக்கும் அரசருக்குங் கேடுண்டாகுமெனறும் மழை பெய்யா தொழியுமென்றும் நாட்டிற் பஞ்சம் பசி பிணி கள்வர் பயம் முதலிய அனர்த்தங்களெல்லாம் நேருமென்றும் சைவநூல்கள் சொல்லும்.

"முன்னவனார் கோயிற்பூசைகள் முட்டிடின்
மன்னர்க்குத் தீங்குள வாரிவளங் குன்றும்
கன்னங் களவு மிகுத்திடும் காசினியில்
என்னருள் நந்தி யெடுத்துரைத்தானே"
எனவும்

"ஆற்றரு நோய்மிகும் அவனி மழைகுன்றும்
போற்றரு மன்னரும்போர்வலி குன்றுவர்
கூற்றுதைத் தான் திருக் கோயில்களானவை
சாற்றிய பூசைகள் தப்பிடிற் றானே"

எனவும் வருந் திருமூலர் திருவாக்கைக் கொண்டு அறியலாகும். மேலும் இந்த யுத்த காலத்திலே, இந்நாட்டினர் பஞ்சம் பசி பிணி அச்சம் என்னுமிவற்றால் துன்புறும் நேரத்திலே, நாங்கள் எங்கள் அரசினர் வெற்றியடைய வேண்டுமென்றும் பகைவர் பயமின்றி அவர்கள் எங்களைப் பாதுகாக்க வேண்டுமென்றும் தெய்வத்தைப் பிரார்த்திக்க வேண்டிய சமயத்திலே சிவாலயத்தில் நித்திய நைமித்திகங்களை நடத்தாது முட்டுப்படுத்துதல் அரசனுக்கும் பிரசைகளுக்குஞ் செய்யப்படும் பெருந் துரோகமெனக் கொள்ளத்தக்கதாம்.

(4) சகோதரர்களாகிய பெரிய முதலாளி சின்ன முதலாளியென்னும் இருவரும் சில வருடங்களுக்கு முறையே சிவபதவிசேர, சின்ன முதலாளியின் பிள்ளைகள் பராயமற்றவர்களாயிருத்தலினால், அப்பிள்ளைகளின் பொருட்டுச் சின்ன முதலாளியின் பத்தினியாரே குறித்த சிவன் கோயிலின் எசமாட்டியாக இப்பொழுது பரிபாலித்து வருகின்றார்.

(5) வண்ணார்பண்ணைச் சிவன் கோவில் ஆதீனகர்த்தர்கள் குறித்த சிவன் கோயில் தங்கள் குடும்பக் கோயிலென்றும், அக்கோயிற் கருமங்களைத் தாங்கள் நினைத்தபடி நடத்துத தங்களுக்கு அதிகாரமுண்டென்றும், ஊரார் அயலார் இஷ்டமானால் வந்து கும்பிட்டுப்போகலாம். உபயஞ் செய்யவேண்டின் அநுமதியோடு உபயஞ் செய்யலாமேயொழியக் கோயிற் கருமத்தில வேறு எவ்வாற்றானுந்தலையிடக் கூடாதென்ற கொள்கையுண்டுள்ளவர்கள்; ஆனதால இங்குள்ள பெரியோராக, எம்மைப்போன்ற சிறியோராக, யார் புத்தி சொன்னாலும் கேட்கமாட்டார்களென நினைக்கின்றோம். இக்காரணம் பற்றித்தான் அயலார் பெரியார் இக்கோயில விஷயத்திற் றலையிடுவதில்லை. நித்திய நைமித்திகங்கள் காலந்தோறும் நடத்தலின்றிக் கிரமமின்மையாக நடக்குங் கோயிலுக்கயலே குடியிருத்தலைக் காட்டிலும் கோயிலிலலாவூரிற் குடியிருத்தல் நன்றாம். வண்ணார்பண்ணைச் சிவன்கோயிலிற் கொடியேறவேண்டியதினம் நாளை (வெள்ளிக்கிழமை) பாகும்.

(6) ஒரு காலத்திலே வண்ணார்பண்ணைச் சிவன்கோவிலைப் பின்பற்றி யாழ்ப்பாணத்திலும் இலங்கையின் ஏனைய பாகங்களிலுமுள்ள கோயில்களிற் கருமங்கள் நடத்தப்பட்டுவந்தமை மெய்தான்; ஆனால் காலஞ்செல்லவிக்கோயில்பின்பற்றக் கூடியநிலையிலில்லாதொழியவேனைய கோயில்களின் அதிகாரிகளும் ஊரவர்களும் இதனைப் பின்பற்றாதொழிந்தனர். நல்லூர்ச் சட்டநாதர் கோயில் வல்வெட்டித்துறைச் சிவன்கோயில் முதலிய தலங்கள் எங்களூர்ப் பிறந்த மக்களாற் பரிபாலிக்கப்படுவன வாதலினாலும், அவர்கள் கோயிலதிகாரிகளாயிருந்தாலும் ஊரவரை உசாவியவரோடு ஒத்திசைப்பவர்களாதலினாலும், கோயில் பொது என்ற கொள்கையுடையவர்களாயிருத்தலினாலும், சிவத்துரோகத்திற்குப் பெரிதும் பயந்தவர்களென்ற காரணத்தினாலும், இவ்வருடத்திலே தங்கள் தங்கள் கோயில்களில் நடக்கவேண்டிய நைமித்திகமாகிய மகோற்சவத்தை, அரசினரின் யுத்தகால நிபந்தனைகட்கு அமைய நடத்துவார்களென நீங்களும் மற்றையெவரும் காத்திருத்தலாகும்.

பத்திராசிரியர்.

## செய்திகளின் ஆதாரம் வேண்டிய போது வெளியிட வேண்டும்

புதியடில்லி, மார்ச், 2—

ஒரு பத்திரிகையில் அவசரச் சட்டம் நடைக்கு வந்த பிறகோ அதற்கு முன்னரோ ஏதாவது இரகசியச் செய்தி வெளியாகி அது விரோதிக்கு உதவக் கூடிய சாதனமாக விருக்குமானால், அச்செய்திக்கு ஆதாரமென்ன வென அதிகாரிகள் கேட்டால் அந்த விவரத்தைப் பத்திரிகை ஆசிரியர்களும் பிரசுரகர்த்தர்களும் அச்சுக் கூடச் சொந்தக்காரர்களும் உடனே வெளியிட வேண்டுமெனப் பாதுகாப்புச் சட்டப்படி புதிதாக ஓர் உத்தரவு பிறப்பிக்கப் பட்டிருக்கிறது.

## சரஜொகுலு சோபியா செல்வாரா?

அங்காரா, மார்ச், 8

கூடிய விரைவில் ஜெர்மன் அயல் நாட்டு மந்திரியான ஹெர். வான்ரிப்பண்ட்ராப் இத்தாலிய அயல் நாட்டு மந்திரியான கவுண்சியானோ ஜெர்மனியிலுள்ள ஜப்பானிய ஸ்தானிகர் ஆகியோர் சோபியாவில் மகாநாடு கூடிப் பேசப் போவதாக நாஜி ஏஜெண்டுகள் பல வதந்திகளைக் கிளப்பிக் கொண்டிருக்கின்றனர். துருக்கி அயல்நாட்டு மந்திரியான மிஸ்றர். சரஜொகுலுவும் அம்மகாநாட்டிற் கலந்து கொள்ள அழைக்கப்படலாமென்ற நாஜிபரின் வதந்தி கூறுகிறது. ஆயின், இது பற்றி அங்காராவில் எவ்வித தகவலுங் கிடையாது. அங்காரா அதிகாரிகள் இதைப் பரிகசிக்கின்றனர்.

## வவனியாக் கொலை யெத்தன வழக்கு

### எதிரி விடுதலை செய்யப்பட்டார்

(நமது நிருபர்)

9-3-42

வவனியாவில் வசிக்கும் தாமோதரம்பிள்ளை-தம்பிராசா அல்லது கந்தையா வென்பவரைச் சென்ற 1941-ம் ஆண்டு ஆகஸ்ட்மீ 20 திகதி அவ்வூர்க் கறுப்பையா-பெரியசாமி எனனும் இந்தியன் ஒரு விறகு கட்டையால் அடித்துக் கொலை செய்ய எத்தனித்ததாகக் குற்றஞ் சாட்டிய வழக்குச் சுப்பிறீம் கோட்டில் விசாரணைக் கெடுக்கப்பட்டது.

வழக்கின் சாரமாவது:- இச்சம்பவம் இரவில் நடைபெற்றது. அருணாசலம்-சுப்பிரமணியமும் தமையனுருமாக ஒரு தேனீர்க்கடையை வவனியாவில் வைத்திருந்தனர். எதிரி இந்தக் கடையில் இச்சம்பவம் நடப்பதற்கு ஒரு மாசத்திற்கு முன்னதாக, வேலை செய்ய வந்து நின்றான். இவன் வேலை செய்யவந்து சிலநாட்களின் பின் சுப்பிரமணியத்திடம் ரூபா 10 ஐக் கடனாகக் கேட்டான். சுப்பிரமணியம் கடன் கொடுக்க மறுத்து விட்டார். ஆகவே, இவர்கள் இருவருக்கு மிடையே மனக்கசப் பேற்பட்டது. இச்சம்பவத்தன்று காலை எதிரி தமக்குச் சுகமில்லை யென்று கூறி வேலைசெய்ய மறுத்தார். சுப்பிரமணியம் கடைக்குத் தேவையான பலகாரங்கட்கு ஒழுங்கு செய்வதற்கு எதிரியை வேலை செய்யும்படி கேட்டார். எதிரி மறுத்து விட்டான். பின்னர்ப் பிற்பகலளவில் சுப்பிரமணியம் தமது கடைக்குப் பக்கத்தே சிறிதுதூரத்திற் சப்பாலுள்ள சுப்பையா வென்பவருடைய கடைக்குச் சென்று கந்தையாவை அழைத்து வந்து ஆக வேண்டியவற்றை ஒழுங்கு செய்தார். கந்தையா மாவிடித்து அதனைச் சமையலறையிற் கொண்டு போய் வறுக்கும்போது, எதிரி ஒரு விறகு கட்டையை எடுத்துக் கொண்டு வந்து சுப்பிரமணியத்திற்கு அடிக்க ஓங்கினர். சுப்பிரமணியம் தமது கையை நீட்டிக் கொடுத்து அடியைத் தடுத்தார். அடி தோள்மூட்டில் விழுந்தது. பின்னர், சுப்பிரமணியம் சமையலறைப் பக்கமாக ஓடி வெளியே சென்றுவிட்டார். எதிரி சமையலறைக்குச் சென்று காயக்காரனாகிய கந்தையாவுக்கு அடித்தார். இதன் பின்னர்க் காயக்காரன் நிலத்தில் விழுந்து விட்டார். எதிரி அவ்விடத்தை விட்டு ஓடிவிட்டான்.

எதிரி தாம் கந்தையாவுக்கு அடிக்கவில்லை யென்றும் சுப்பிரமணியத்திற்குத் தாம் அடித்ததால், சுப்பிரமணியந் தான் கந்தையாவுக்கு அடித்ததாயும் எதிரி சுப்பிரமணிய மென நினைத்துக் கந்தையாவுக்கு அடித்ததாயும், சுப்பிரமணியம் எதிரி என நினைத்துக் கந்தையாவுக்கு அடித்ததாயும் கீழ்க் கோட்டிற் கூறியதாகக் கூறப்பட்டது.

விசாரணையின் பின் யூரிமார் ஏகமனசாக எதிரியைக் குற்றவாளியல்ல வெனக் கூறினர்.

நீதிபதி எதிரியை விடுதலை செய்தார்.

## 25 சத நோட்டை அங்கீகரிக்க மறுப்பு

### கடைக்காரருக்கு ரூ 10 அபராதம்

வண்ணார்பண்ணை பெருமாள் கோவிலடியிற் கடைவைத்திருக்கும் சின்னையா-கனகசபை $\frac{A}{1}$ 608674 ம் இலக்க இருபத்தைந்து சத நோட்டை எடுத்துக் கொண்டு ஒரு இருத்தல் சீனி கொடுத்து மிகுதிப் பணத்தையுங் கொடுக்க மறுத்ததாகக் குற்றஞ்சாட்டி ஒரு வழக்கை யாழ்ப்பாணம் பொலிஸார் யாழ்ப்பாணம் கோட்டில் தொடர்ந்திருந்தனர்.

அப்போது பொலிஸ் சார்ஜன் நாகரத்தினங் கூறியதாவது:-

எதிரி வியாபாரஞ்செய்யுங் கடையில் சாமான்கள் கூடுதலான விலைக்கு விற்கப்படுவதாக ஒரு பெட்டிசம் பொலிசாருக்குக் கிடைத்தது. நான் வேறு பொலிஸ்காரரோடு சாதாரண உடையணிந்து அங்கு சென்றேன். மேற்கூறிய இலக்கமுள்ள இருபத்தைந்து சத நோட்டை 221-ம் இலக்கப் பொலிஸ் காரரிடம் நான் கொடுத்து எதிரியினுடைய கடையில் ஒரு இருத்தல் சீனி வாங்கச் சொன்னேன். அவர் கடைக்குச் சென்றதும் நான் அவரைப் பின்தொடர்ந்தேன். 221-ம் இலக்கப் பொலிஸ்காரர் மேற்படி நோட்டைக் கொடுத்துச் சீனியைக் கேட்டபோது, எதிரி அந்த நோட்டை எடுக்க மறுத்ததாக எனக்குக் கூறினர். நான் சென்று சோதித்தபோது நோட்டையும் வேறு சில்லறைரூபா 4.08 சதத்தையு மெடுத்தேன் நான் எதிரியைப் பொலிஸ் நிலையங் கொண்டு சென்றேன். எதிரி குற்றத்தை ஒப்புக் கொண்டார். நீதிபதி இம்மாதிரியான வழக்குகளில் இதுதான் முதல் வழக்காகையால் எதிரிக்கு ரூபா 10 அபராதம் விதிப்பதாகக் கூறினர்.

## சாப்பாடு கிடையாமற் கள்ளைக் குடித்தேன்

### நீதிஸ்தலத்தில் எதிரி கூறிய சமாதானம்

(நமது நிருபர்)

9-3-42

சாவகச்சேரிக் கோட்டில் கூளிபுரத்தில் வசிக்கும முருகேசு சின்னத்தம் எழுதுமட்டுவாளில் குடித்துக் குழப்பம் செய்ததாகக் குற்றஞ் சாட்டி ஒருவழக்குத் தொடரப்பட்டது.

எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டபோது தாம் வரணிக்கு ஒருமாட்டுக் கொடுக்கல் வாங்கற் கணக்கால் வரவேண்டியகாசை வாங்கச் சென்றதாயும் அங்கே தமக்குச் சாப்பாட்டுக்கடைக்காரர்கள் கூப்பன் இல்லாது சாப்பாடுகொடுக்க மறுத்ததாயும், ஆகையால் நாட பசிக்கொடுமையாற் கள்ளுக்குடித்ததாயும் தாம் குடித்தபின்னர்ப் பாடிக்கொண்டு வந்தமையால் திசைமறந்து பழைப்பக்கம் வந்ததாயும் அவ்வூர் விதானையார் தம்மை விசாரித்தபோது தம்மிடமிருந்து ரூபா 21 ஐயும் அவரிடம் கொடுத்ததாயும கூறினர். நீதிபதி எதிரிக்கு 1 ரூபா அபராதம் விதித்து ரூபா 21 ஐயும் அவரிடம் கொடுக்கும்படி உத்தரவிட்டார்.

---

## சென்னை அருகிற் கடலில் மிதந்த இலங்கையர்

### செம்படவர் கண்டுபிடித்த விதம்

சென்னை, மார்ச் 5—

இலங்கையரான கே. எம். ஜே. அந்தோனி பெர்னாண்டோ என்பவர் மிகவுங் களைப்புற்ற நிலைமையில் மைலாப்பூர்க் கடற்கரை அருகில ஒதுக்கித் தள்ளப்பட்டிருக்கக் காணப்பட்டார். சென்ற ஞாயிற்றுக்கிழமை மாலை இரு செம்படவர்கள் அவரைக் கண்டனர். கே. எம். ஜே. பெர்னாண்டோ இலங்கை, வன்னப்புவா, புலிட்டிபர்வையைச் சேர்ந்தவராவர்.

அன்று மாலை 7 மணிக்கு உதவிக்காக யாரோ ஒருவர் கூக்குரலிடுஞ் சத்தம் இரு செம்படவர்களுக்கு எட்டியதாகவும் அவர்கள் சிறிது நேரம் தேடியபொழுது அந்த பெர்னாண்டோவைக் கண்டதாகவும் கூறப்படுகிறது. அவர்கள் அவரைக் கரைக்குக் கொண்டுவந்து குளிர்ந்த தண்ணீரால் குளிக்கவைத்துப் பின பொலீஸாரிடம் ஒப்படைத்தனர்.

பெர்னாண்டோ பொலீஸாரிடம் தனக்கு ஏற்பட்ட விபத்துப்பற்றிப் பின்வருமாறு கூறினர்:-

பெப்ரவரிமீ 27ந் திகதி வெள்ளிக்கிழமை காலையிற் குளிப்பதற்காக இலங்கையிலுள்ள எங்கள கிராமத்துக்கு அருகிற் கடலில் இறங்கினேம். அதன்பின், நான் பிரக்ஞை யிழந்துவிட்டேன். பின் எவ்விதம் சென்னைக் கடற்கரையருகில் மிதந்து கொண்டிருக்க நேரிட்டதென்பது பற்றி யாதொன்றும் தெரியாது.''

பொலீஸார் அவரைப்பந்தோபஸ்தில் வைத்தனர். மேற்கொண்டு விசாரணை செய்த பின், அவரை இலங்கைக்குத் திருப்பி அனுப்பி விடுவதென்று பொலீஸார் தீர்மானித்தனர்.

---

## பலாமரம் வெட்டியவருக்கு ரூ. 35 அபராதம்

### பாதுகாப்புச் சட்டத்தை மீறியதன் பயன்

அம்பஹா, மார்ச், 6

பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் தேசாதிபதி விடுத்த உத்தரவை மீறிப் போபகமையைச் சேர்ந்த கே. டப்ளியூ. வ. தெகிஸ்சிங்கோ என்பவர் பலாமர மொன்றை வெட்டி வீழ்த்தியதாகக் குற்றஞ் சாட்டித் தொடரப்பட்ட வழக்கு கம்பஹாப் பொலீஸ் கோட்டால் விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்பட்டது.

எதிரி தமது குற்றத்தை ஒப்புக் கொள்ளவே அவருக்கு ரூபா. 35 அபராதத்தை நீதிபதி விதித்தார்.

அரசாங்க நிலத்தைத் தவிர்த்து வேறு எந்த நிலத்திலும பலா ஈரப்பலா மரங்களை வெட்டுவதைத் தடைசெய்து சென்ற மாதம் 2-ந் திகதி ஓர் உத்தரவை ஒரு விசேஷ கசெற்றின் மூலம் மேன்மை தங்கிய தேசாதிபதி விடுத்திருந்தார்.

## நெல்லுந் தானியங்களும்

### அரசாங்கமே தனித்து வாங்க வசதி

### தேசாதிபதி கொண்டுவந்துள்ள விதிகள்

இலங்கையிலுள்ள நெல்லையும் தானியங்களையும் அரசாங்கமே தனிய வாங்கக்கூடியதாகச் செய்வதற்காகத் தேசாதிபதியால சட்டங்கள் செய்யப்பட்டிருக்கின்றன.

அதிகாரம் பெற்ற உணவுக் கட்டுப்பாட்டு உத்தியோகஸ்தரைத்தவிர, வேறுஎவரும் ஓரேநேரத்தில் 5 புசல் நெல்லுக்கதிகமாக அல்லது $2\frac{1}{2}$ புசல் அரிசிக்கு அதிகமாக வாங்கவோ விற்கவோ கூடாது.

உத்தரவுச் சீட்டுப் பெற்றாலன்றி மேற்குறித்த தொகைக்கு மேலதிகமாக ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்துக்குக்கொண்டுபோகவுங் கூடாது.

இந்தவிதிகளில் எதையேனும் மீறிநடப்போர் 1,500 ரூபாவுக்கு அதிகப்படாத அபராதத்திற்கு அல்லது மூன்றுமாதங்களுக்கு மேற்படாத வெறுங்காவல் அல்லது கடுங்காவலதண்டனைக்கு அல்லது ஏககாலத்தில அபராதமும் மறியல்தண்டனை ஆகிய இரண்டிறகும் ஆளாகக்கூடும்.

நெல்லுக்குச் கூடியவிலை ரூபா 3-50 ஆகவும்மிகக் குறைந்தவிலை ரூபா 2-50 ஆகவும்குறிக்கப்பட்டிருக்கிறது.

ஊர் அரிசி புசலொன்று ரூபா 5-50 (குறைந்தவிலை)ரூபா 7-50 (கூடினவிலை)

குரக்கன் புசலொன்று ரூபா 4—50 (குறைந்தவிலை) ரூபா 5-50(கூடினவிலை)

தினைசாமை புசலொன்று ரூபா 4-75 (குறைந்தவிலை)ரூபா 5-75 (கூடினவிலை)

---

## தேசப்படங்களைப் பூட்டி வைக்க உத்தரவு

### பொதுஸ்தலங்களிலிருந்து அப்புறப்படுத்தப்படும்

போக்குவரத்து மந்திரியின கோரிக்கையின்படி புகைரத நிலையங்களில் சனங்களின் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்த இலங்கைப் படங்கள் யாவும் அப்புறப்படுத்தப்பட்டு விட்டன.

புகைரதத்தின் உத்தியோக தேவைகளுக்காக உபயோகிக்கப்பட்டு வந்த குறித்த படங்களும இலங்கையின் பறபல பிரிவுகளின் படங்களும் மற்றவர்களுக்குக் கிடைக்கக் கூடாத வண்ணம பலமான லாச்சிகளிற் பூட்டி வைக்கப்பட வேண்டுமென்று உத்தரவிடப்பட்டிருக்கிறது. அவை உபயோகிக்கப்பட்டு வராவிட்டால் இரும்புப் பெட்டிகளிற் பூட்டிவைக்கப்பட வேண்டுமென்றும உத்தரவிடப்பட்டிருக்கிறது.

சில அரசாங்க இலாகாக்களில உத்தியோக உபயோகத்திற்கும் பொதுசன உபயோகத்திறகுமாக வைக்கப்பட்டிருக்கும் சில டிஸ்திறிக்குகளின் திட்டமான பகுதிகளில அல்லது நகரங்களின படங்களையும், அதேபோல அப்புறப்படுத்தும்படி உத்தரவிடப்பட்டிருக்கிறது.

மேலும் பாலங்கள் நீர் நிலையங்கள் போக்குவரத்துச் சாதனங்கள் ஆகியவை சம்பந்தமான திட்டங்களானுலுஞ் சரி, படங்களானுலுஞ் சரி, தேவைப்படுமானுல், பூட்டி வைக்கப்படும அல்லது அழித்து விடப்படும்.

விளம்பர உபயோகத்திற்காகத் திட்டமான அளவின்றி வரையப்பட்ட படங்கள் குறித்த கட்டுப்பாடுகளாற் பாதிக்கப்படமாட்டா.

குறித்த உத்தரவுகளின்படி, புகைரத நேர அட்டவணை போன்ற சில பதிப்புக்களில இணைக்கப்பட்டுள்ள படங்களும் வாபீஸ் செய்யப்பட்டிருக்கின்றன.

---

## அஸ்ஸாமில் புதிய மந்திரிசபை

ஷில்லாங், மார்ச், 3 —

அஸ்ஸாம் அசெம்பிளி தேசியக் கட்சித் தலைவர் ஸ்ரீ ரோஹிணி குமார சௌத்ரி நாளை பிற்பகல் கவர்னரைப் பேட்டி கண்டு பேசுவார்.

கட்சிகளின் பலத்தை விவரிக்கும்போது, அவர் தம்மால் மந்திரி சபை அமைக்க முடியுமென்பதில தேசாதிபதியைத் திருப்தி செய்ய இயலு மென்று பத்திரிகைப் பிரதிநிதிகளிடம் கூறினர்.

## குடியேற்ற நாட்டுத் திட்டம்

### குறை கூறியவர்களுக்கு மிஸ்றர். அமெரியின் மறுமொழி

லண்டன், மார்ச், 6—

குடியேற்றநாடுகள் விஷயத்தில் பிருத்தானியர் அநுஷ்டிக்குந் திட்டம்பற்றிச் சமீபத்தில் பாராளுமன்றத்திற் சிலராற் குறைகூறப்பட்டதல்லவா? இந்தியா மந்திரியான மிஸ்றர். எல். எஸ். அமெரி இன்று ஒக்ஸ்போர்ட் யூனியனிற் பேசும்போது அதற்கு மறுமொழியளித்துள்ளார். சமீபகாலத் தோல்விகள் காரணமாகவே, சம்பந்தப்பட்டவர்கள் குடியேற்ற நாட்டுத் திட்டத்தைக் குறைகூறினரென்று அவர் சொன்னர்.

அவர் குறிப்பிட்டதாவது:-

ட்ரபல்கார் யுத்தத்தில் ஈட்டிய சடலாதிக்கம் என்னும் கேடயத்தின் பாதுகாப்பின்கீழ் நமது சாம்ராஜ்யம் சிறந்த அமைப்போடு வளர்ந்தோங்கி வந்திருக்கிறது.

ஹொங்கோங், சிங்கப்பூர், மலாயா ஆகியநாடுகளில பிருத்தானிய நிர்வாகம் நீதிதழைக்கச் செய்தது; செல்வஞ் செழிக்கச்செய்தது. அங்குள்ள மக்களை யுத்தத்திற்குத் தயாராக்காமற்போனதுதான் நாம் செய்யாமல்விடுத்த ஒரு காரியமாகும்.

மலாய்நாட்டவர் நிராயுதபாணிகளாகவே இருந்தனர். இராணுவப் பயிற்சியுங் கிடையாது. யுத்தம் பற்றி அவர்கள் சிந்தித்ததுமில்லை. இந்நிலைமையில் அவர்களுக்கு இராணுவப்பயிற்சிஅளிக்கநாமமுற்பட்டிருப்போமாயின், பிருத்தானிய ஏகாதிபத்தியம், இராணுவ மோகங் கொண்டதென்றும் பிறரை இராணுவபலத்தால் அடக்கி ஒடுக்கக்கூடியதென்றும் மற்றவரால் கண்டிக்கப்பட்டிருப்போம்.

பிருத்தானிய சாம்ராஜ்யநாடுகள் மீளவும் புத்துயிர் பெற்றெழுமாயின் நமது அரசியல், பொருளாதார அமைப்புகளைப் பல துறைகளில் மாற்றி அமைத்துக்கொள்ள வேண்டியிருக்கும்.

இந்தியா விஷயத்திலும் இதே உண்மைதான். யுத்தந்தொடங்கிய பொழுது இந்திய இராணுவம் 2,30,000 பேர்களைக் கொண்டதாகவேயிருந்தது. அஃதாவது, இந்திய சனத்தொகையில் ஒவ்வொரு 1500 பேர்களுக்கும் ஒரு போர்வீரன். சனத்தொகையில் ஒவ்வொரு 6000 பேர்களுக்கும் ஒரு பிருத்தானியன் போர்வீரன்.

இந்தியாவின் இராணுவபலம் இவ்வளவு குறைவாக இருந்துங் கூட இந்திய அரசியல் வாதிகள் எப்பொழுதும் இந்திய இராணுவத்திற்கு அமோகமான பணஞ் செலவுசெய்யப் படுகிறதென்று கூறி அதைப் பிரமாதப்படுத்திக் கண்டித்தே வந்தனர்.

---

## புதிய இந்தியத் தபாற் கட்டணம்

### கடிதங்களுக்குக் காலணு உயர்வு!

புதுடில்லி பெப் 28

இந்திய மத்திய சட்டசபையிற் பிரேரிக்கப்பட்டிருக்கும் பொக்கிஷமசோதாவில் அடங்கியுள்ள புதிய தபாற் கட்டணங்களின் விபரம் வருமாறு:-

#### கடிதங்கள்

ஒரு தோலாவுக்கு அதிகப்படாத நிறைக்கு $1\frac{1}{2}$ அணு.

இதற்குமேல் அதிகப்படியாகவுள்ள ஒவ்வொரு தோலாவுக்கும் அல்லது அதன் பாகத்திற்கும் $\frac{1}{2}$ அணு

#### போஸ்ற் காட்டுகள்

தனிக்காட்—9 பைசா

றிப்ளைக்காட்—$1\frac{1}{2}$ அணு

#### புத்தகம் மாதிரிப் பாக்செற்றுகள்

முதல் 5 தோலாவுக்கு அல்லது அதன் பாகத்திற்கு—9 பைசா.

இதற்கு மேற்பட்ட ஒவ்வொரு $2\frac{1}{2}$ தோலாவுக்கும் அதன் பாகத்திற்கும் மூன்று பைசா.

#### றிஜிஸ்றர் செய்யப்பட்ட பத்திரிகைகள்

10 தோலாவுக்கு மேற்படாததற்கு 3 பைசா.

இதற்கு மேற்பட்ட ஒவ்வொரு 20 தோலாவுக்கும் அரை அணு.

#### பார்சல்கள்

40 தோலாவுக்கு அதிகப்படாததற்கு—4 அணு.

40 தோலாவுக்கு அதிகப்பட்ட ஒவ்வொரு 40 தோலாவுக்கும் 4 அணு.

## கொரியாவின் சுயேச்சை

### 23-வது வருஷக் கொண்டாட்டம்

கொரியா சுயேச்சை சம்பந்தமான 23-வது வருஷக்கொண்டாட்டம் சுங்கிங்கில நடந்ததாகச் சுங்கிங் றேடியோ கூறுகிறது. கொரியா புரட்சித்தலைவர்களின் ஞாபகார்த்தமாக 5 நிமிஷ நேரம் மௌனம் அநுஷ்டிக்கப்பட்டது. கொரியா சுயேச்சைக்காக ஆதியிற் சேவைபுரிந்த ஜனாதிபதி ரூஸ்வெல்டுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது. ஜப்பானை முறியடிப்பதற்காக நேச தேசப் படைகளோடு சேர்ந்து உழைக்கத் தாங்கள் தயாராகவிருப்பதாகக் கொரியா சுயேச்சை இராணுவம் அறிவித்தது.

---

## விவாகம்

இரத்தினதிக்கம்—

சேந்திச்செல்வம்

இம்மாதம் 7-ந் திகதி சனிக்கிழமையன்று கொழும்பு செந். தோமஸ் கல்லூரி ஆசிரியர் திருவளர் செல்வன இரத்தினதிக்கம் நேசசிங்கம் அவர்களுக்குப் வண்ணை திரு. வை இராமநாதன வர்களுடைய புதல்வியும் கொழும்பு சைவமங்கையர் கழகத்தின்கீழ் ஆசிரியையாகக் கடமை பார்ப்பவருமான திருவளர்செல்வி சேந்திச் செல்வத்திற்கும் விவாகம் வெள்ளவத்தையில நடைபெற்றது.

மணமக்கள் சகல செல்வமும் பெற்று நீடுவாழ எல்லாம்வல்ல இறைவன் திருவருள் புரிவாராக.

---

## திருச்சி றேடியோ நிகழ்ச்சி

(396மீ)

(† இசைத்தட்டு)

### வெள்ளி மார்ச்சு 13

காலை 7-30 ஆரம்பம் 7.40 தமிழில் செய்திகள் 7.50 எஸ். டி சுப்புலக்ஷ்மி† 8 00 ஆங்கிலத்தில் செய்திகள் 8-10 சினிமாப் பாட்டுகள் † 8.30 எல். அம்மு குட்டி அம்மா பாட்டு 9-00 ஒலிபரப்பு முடிவு.

1.00 இரு குரலிசை † 1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-35 எல். அம்மு குட்டி அம்மா பாட்டு 2.00 தமிழில்செய்திகள் 2.05 கல்வி ஒலிபரப்பு 2.30 ஒலிபரப்பு முடிவு.

மாலை 5-00 தஞ்சாவூர் லக்ஷ்மிநாராயணஐயர் பாட்டு 5.40 குரான்-இ-ஷரீப் 5.50 மன்ஸுர் கவ்வால் † 6.00 ஆங்கிலத்தில் செய்திகள் 6.05 கிராமநிகழ்ச்சிகள் 6.30 செம்பொன்னார்கோவில் எஸ். ஆர், கோவிந்தசாமிப்பிள்ளை நாகஸ்வரம் 7 00 செய்தி நிகழ்ச்சி 7.15 இலக்கிய வாசகம் 7.30 அறிவிப்பு 7-45 தமிழில் செய்திகள் 8.00 செம்பொன்னார் கோவில் எஸ். ஆர். கோவிந்தசாமிபிள்ளை நாகஸ்வரம் 8-30 உலக விவகாரங்கள் † 8.45 தஞ்சாவூர் லக்ஷ்மிநாராயண ஐயர் பாட்டு 9.20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9.45 இடைவேளை † 9.55 எதிரி பிரசாரம் 10-00 ஒலிபரப்பு முடிவு.

### சனி மார்ச்சு 14

காலை 7-30 ஆரம்பம் † 7.40 தமிழில் செய்திகள் 7-50 சாந்த துகாராம் 8-30 பவானி வி. ஸ்ரீகண்டஐயர் வயலின் 9.00 ஒலிபரப்பு முடிவு.

1.00 படப்பாட்டுக்கள் † 1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1.35 பவானி வி. ஸ்ரீகண்ட ஐயர் வயலின் 2.00 தமிழில் செய்திகள் 2-05 புதுக்கோடு சீதாராம பாகவதர் பாட்டு 2.30 ஒலிபரப்பு முடிவு.

மாலை 5.00 புதுக்கோடு சீதாராம பாகவதர் பாட்டு 5-40 திருவெம்பாவை விளக்கம் 5.50 எம். வி. நாதன் 6.00 ஆங்கிலத்தில் செய்திகள் 6-05 கிராம நிகழ்ச்சிகள் 6.30 மதராஸில் உள்ள படி. 7.00 நாஜி ஐரோப்பா 7.15 தாள வாத்தியக்கச்சேரி 7-30 அறிவிப்புகள் 7.45 தமிழில் செய்திகள் 8.00 டி. ஆர். மகாலிங்கம் புல்லாங்குழல் 9-15 லலிதா வெங்கட்டராம் † 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9.30 லண்டனிலிருந்து செய்திகள் 9.45 இடைவேளை † 9.55 எதிரி பிரசாரம் 10.00 ஒலிபரப்பு முடிவு.

### ஞாயிறு மார்ச்சு 15

காலை 7.30 ஆரம்பம் 7.40 தமிழில் செய்திகள் 7.50 வைலக் † 8-00 ஆங்கிலத்தில் செய்திகள் 8.10 திரைகானம் † 8-30 எஸ். கிட்டம்மாள் பாட்டு 9.00 ஒலிபரப்பு முடிவு.

12-00 குரல்வகை † 12.30 ஒலிமலர் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1.35 எஸ் கிட்டம்மாள் பாட்டு 2.00 தமிழில் செய்திகள் 2-05 சினிமா கீதங்கள் † 2.30 ஒலிபரப்பு முடிவு.

மாலை 5.00 செம்பை சுப்ரமண்ய பாகவதர் பாட்டு 5.40 தேவாரா தனை 6 00 ஆங்கிலத்தில் செய்திகள் 6.05 கிராம நிகழ்ச்சிகள் 6-30 செம்பை வ. சுப்ரமண்ய பாகவதர் பாட்டு 7-00 செய்தி நிகழ்ச்சி 7.15 ஜப்பானில் செய்தது 7.30 அறிவிப்புகள் 7-45 தமிழில் செய்திகள் 8.00 பாபா கே. எஸ். வயலின் 9.00 அமெரிக்க அபிப்பிராயம் லீலா சிட்னிஸ் † 9.20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9.45 இடைவேளை † 9.55 எதிரி பிரசாரம் 10.00 ஒலிபரப்பு முடிவு.

## போக்கு வரத்து நிபுணர்

### கொழும்பு வந்து சேர்ந்தார்

போக்குவரத்து நிபுணர் மிஸ்றர். எஸ். டப்ளியூ. நெல்ஸன் இங்கிலாந்திலிருந்து சென்ற திங்கட்கிழமை காலை கொழும்புக்கு வந்துசேர்ந்தார்.

இலங்கையின் போக்கு வரத்துப் பிரச்னைகளைப்பற்றிப் பரிசீலனை செய்வதும் தெரு, புகைரதப் போக்குவரத்துக்களை இணைக்கும் திட்டமொன்றை நடையிற் கையாண்டு பார்ப்பதும் அவர் இங்குவிஜயஞ் செய்திருப்பதன் நோக்கங்களாகும்.

மிஸ்றர். நெல்ஸன் லண்டன் யுத்தப்போக்குவரத்து மந்திரி காரியாலயத்தைச் சேர்ந்த ஓர் அதிகாரி. இப்பொழுது இலங்கை அரசாங்கத்துக்கு அவரதுசேவை தரப்படுகிறது.

ஒரு பத்திரிகை நிருபருக்குப் பேட்டியளித்தபொழுது அவர் கூறியதாவது:-

இலங்கைப் போக்கு வரத்துப் பிரச்னைபற்றி நன்கு பரிசீலனைசெய்யும்வரை அதுசம்பந்தமாக நான் ஏதுங் கூறமுடியாது. நான் இங்கிலாந்திலிருந்து புறப்படுவதற்கு முன் ஹாமண்ட் கோம்மிஷன் அறிக்கை இப்பிரச்னையை யோட்டிய அறிக்கைகளையும் பரிசீலனை செய்தேன்.

நான் மலாயாவில் 1936 முதல் 1939-ம் ஆண்டுவரை சேவைசெய்தேன். அங்கு நான்தான் போக்குவரவுத் திட்டத்தை அமைத்துக் கொடுத்தேன். இலங்கையிலுள்ள போக்குவரத்துப் பிரச்னையைப் போன்றதாகவே இருக்கிறது. அங்கும் மலாயா அரசாங்கப் புகையிரதத்துக்கும் தெருப்போக்கு வரத்துக்குமிடையிற் பலத்த போட்டியிருந்து வந்தது.

மிஸ்றர். நெல்ஸன் இலங்கையில் இரண்டு வருஷகாலமிருக்க உத்தேசித்திருக்கிறார்.

இலங்கையில் தெரு, புகைரதப் போக்கு வரத்துக்கள்பற்றி நேரிற் சில விஷயங்களை அறிந்துகொண்டபின் அவர் இன்னும் இரண்டு மாதகாலத்திற் பூர்வாங்கமாக அறிக்கையொன்றை அரசாங்கத்திடம் சமர்ப்பிப்பார்.

---

## கடிதம்

### கொழும்பு விவேகானந்த சபை அகில இலங்கைச் சைவசமய பாடப்பரீக்ஷை 1942

யுத்தத்தின் காரணமாக, மாணவர்களும் ஆசிரியர்களும் உணவுப் பொருளபிவிருத்தியில கூடிய கவனஞ் செலுத்த வேண்டியிருப்பதால், 1942-ம் ஆண்டு ஏப்பிறில்மீ நடைபெற விருக்கும் சமய பாடப் பரீட்சையை வேறொரு மாசத்திற்குப் பின்போட்டு வைப்பது சகல பாடசாலைகளுக்கும் வசதியைக் கொடுக்குமெனச் சிலபாடசாலைத் தலைமை ஆசிரியர்கள் அறிவித்திருப்பதால், ஷை சபையின நிர்வாக சபையார் இப்பரீக்ஷையைப் பின்போட்டு வைப்பதற்குத் தீர்மானித்திருக்கிறார்கள். ஆனால் கூடிய சீக்கிரத்தில் இப்பரீக்ஷையை விடாது நடத்தவும தீர்மானித் திருக்கிறார்கள்.

ஆகையால் பரீக்ஷை நடக்கும் திகதி போதிய காலத்திற்குள், மனுத்தாள் அனுப்பிய எல்லாப் பாடசாலைகளுக்கும் அறிவிக்கப்படும்.

இங்ஙனம்

க. சின்னத்தம்பி

பரீட்சைக் காரியதரிசி

விவேகானந்தசபை

கொழும்பு 9—3-42

---

## தமிழில் லண்டன் பீ. ஏ. பரீக்ஷையில் 'ஒனர்ஸ்' பட்டம் பெற்ற முதற் பெண்மணி

சென்ற வாரம் லண்டன் பீ. ஏ., பீ. எஸ்சி. பரீக்ஷைப் பெறுபேறுகள் வெளியாயின. இவ்வாண்டு சித்தி யெய்தியவர்களில் தமிழ் பீ. ஏ. (ஒனர்ஸ்) பட்டம் பெற்று முதலாவது பிரிவில் சித்தியடைந்திருக்கும செல்வி தம்புவும் ஒருவராவர். தமிழில் லண்டன் பீ. ஏ பரீக்ஷையில் 'ஒனர்ஸ்' பட்டம் பெற்ற முதல் பெண்மணி என்ற பெருமை செல்வி மகேஸ்வரிக்குத் தான் கிடைத்திருக்கிறது. இவர் வெள்ளம்பிட்டி அப்போதிக்கரி திரு தம்பு அவர்களின் புதல்வி. சுண்டிக்குளி இராமநாதன் கல்லூரியின் பழைய மாணவி. கொழும்பு சர்வகலாசாலைக் கல்லூரியில் விசேஷ [illegible] கொடை என்ற 'ஸ்கொலர்ஷிப்' பெற்றுக் கற்றவர். தமிழிலும் [illegible] கிருதத்திலும் நல்ல அறிவு பெற்றவர்.

---

# கேள்விப்பத்திரம்

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிக்குக் கீழ்க்கண்ட சாமான்களைச் செய்து கொடுப்பதற்கு இம்மாதம் 16-ந் திகதி திங்கட்கிழமை பகல் 12 மணிவரை கேள்விப்பத்திரங்கள் (Tenders) ஏற்றுக் கொள்ளப்படும். கேள்விப்பத்திரங்கள் சீல் செய்யப்பட்டு மேலுறையில் வலதுபக்க மூலையில் "அல்மேரா முதலியவை செய்வதற்குரிய கேள்விப்பத்திரம்" என்று குறிக்கப்பட்டு "பிரதமாசிரியர், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி" என்ற விலாசத்திற்கு அனுப்பப்படவேண்டும்:—

(1) 4 அல்மேராக்கள் $10' \times 7' \times 1\frac{1}{2}'$

(2) 2 அல்மேராக்கள் $10' \times 5' \times 1\frac{1}{2}'$

(3) பண்டகசாலை அறைக்குச் சலாகைப் பின்னல் மறைப்பு (கதவோடு) $10' \times 7'$

(4) ஒரு நீண்டமேசை 2 தட்டோடும் ஒரு லாச்சியோடும் $10' \times 4' \times 3'$

இவைபற்றிய 'பிளா'னும் ஏனைய விபரங்களும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிப் பிரதமாசிரியர் காரியாலயத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

மிகக்குறைந்த விலைகேட்கும் கேள்விப் பத்திரத்தையாவது அல்லது வேறு குறித்த எந்தக் கேள்விப்பத்திரத்தையாவது ஏற்றுக்கொள்ளப் பிரதமாசிரியர் கட்டுப்பட்டவரல்லர்.

Mis—200. 5—12.3-42

---

## எழுதுமட்டுவாளில் துணியும் சருவமுந் திருட்டு

எழுதுமட்டுவாளில் வசிக்குங் கணபதிப்பிள்ளை - வேலுப்பிள்ளை அவ்வூர்க் கணபதி-மீனாட்சியும் ஆழ்வான்-கிட்ணனையும் வீடு உடைத்த 120 ரூபா பெறுமதியான துணிகளையும் சருவக் குடத்தையுங் களவாடினதாக ஒரு வழக்கைச் சாவகச்சேரி நீதிபதி முன்னிலையிற் றொடர்ந்தார்.

அப்போது கணபதிப்பிள்ளை வேலுப்பிள்ளை கூறிய சாக்ஷியமாவது:-

நானும் எனது மனைவியாரும் இச்சம்பவதன்று இரவு எங்கள் வீட்டில் நித்திரை செய்தபோது,யாரோ வந்து தட்டியை அறுத்து அறைக்குட் புகுந்து அங்கே ஓர் ஓலையால் இழைக்கப்பட்ட பெட்டிக்குள்ளே வைக்கப்பட்ட சாமான்களை எடுக்கும் பொருட்டு அப்பெட்டியை அவிழ்த்தபோது, நானும் மனைவியும் அறைக்கு வெளியே சென்றதும், நாங்கள் வெளியே நின்று சத்தமிட்டோம். நாங்கள் வெளியே நின்றபோது முதலாம் எதிரி ஓலைப்பெட்டியைக் கொண்டு வந்ததையும் இரண்டாம் எதிரி ஒரு சருவக் குடத்தைக் கொண்டு வந்ததையும் நான் கண்டேன். நான் பொலிசாருக்கு இதனை அறிவித்தேன்.பொலிசார் முதலாம எதிரியின வீட்டைச் சோதித்தபோது, ஒன்றையுங் காணவில்லை. இரண்டாம் எதிரியின் வீட்டைச் சோதித்தபோது இரண்டாம் எதிரியின வீட்டிற்குச் சிறிது தூரத்திலுள்ள ஒரு கிடங்கில் புதைக்கப் பட்டிருந்ததைக் கண்டெடுத்தனர்.

இவ்வழக்குமேல்விசாரணைக்கென வருகிற 23ந் திகதிக்குத் தவணையிடப் பட்டிருக்கிறது. ந-கி

## வள்ளுவர் வனப்பு

1-ம் பக்கத் தொடர்ச்சி

நயம்படக்கூறியதின் உட்கருத்தாவது. திருக்குறளைக் கற்குமுறையிற் கற்று அதன்படி ஒழுகுவோர் ஈசன் கழலடியைச் சேர்வது ஒருதலை என்பதும், சிவன்கழல் நல்கும் சிறப்பெல்லாம் செக்காப்போதாரின் செவ்விய நூல் சிருடன் அளிக்கும் என்பதுமாகக் கொள்ளலாம்.

எட்டுவகைவனப்புக்களுள் முதன்மையானது அம்மை வனப்பு. அம்மையாவது சிலவாய் மெல்லியவாய சொற்களால், ஒள்ளியவாயபொருண் மேற் சில அடியாற் சொல்லுவது; இதற்கு உதாரணங்கூறவந்த இலக்கண உரையாசிரியர்கள் எல்லாம் திருக்குறளிலிருந்தே எடுத்துக்காட்டினர். குணசாகரர் முதலியோர்,

"அறிவினு ளெல்லாந் தலையென்ப தீய
செறுவார்க்குஞ் செய்யா விடல்"

... ...

"அறிவினு ளருவ தண்டோ
பிறிதினோய்
தன்னோய்போற் போற்றாக்கடை"

என்ற குறளை எடுத்தாண்டனர். பேராசிரியர் காட்டிய உதாரணமும் வேறொரு திருக்குறளாகவே முடிந்தது.

"மலர்காணின் மையாத்தி நெஞ்
சே யிவள்கண்
பலர்காணும் பூவொக்குமென்று"

என்பது அக்குறளாகும். இதனால் அம்மை வனப்புடன் கூடிய வேறொருநூல் கிடைப்பதன் அருமை நன்கு புலனாகும். கருத்தாவாகுபெயர்க்கு உதாரணம் எல்லாரும் "திருவள்ளுவர்" என்றே கூறிப்போந்தனர். வேறு உதாரணம் இல்லாததே இதன் காரணமாகும். இவ்வித தனிச்சிறப்புகளோடு, அம்மை வனப்பும் வாய்ந்து விளக்குந் திருவள்ளுவராகிய திருக்குறள் நூற்று முப்பத்து மூன்று அதிகாரங்களையுடையது. ஒவ்வொரு பொருள் மேலும் பத்துக் குறளாக, அறம் பொருள், இன்பம் என மூன்று பாலாகப் பிரித்து வள்ளுவர் தம் நூலைச் செய்திருக்கிறார். பத்துப் பத்துக் குறளாக ஒவ்வொரு அதிகாரமும் அமைத்த திறத்தை, சிவப்பிரகாசர் வியந்து திருமாலின் பத்தவதாரங்களோடு மொப்பிட்டார்.

"வற்புறுத்த வோர்பொருளை வள்
ளுவனார் பத்துமுறை
சொற்பொருத்தி யோதும் துணி
வுபோல்—தற்பதத்தால்
ஓதும் பிரமமொரு தானென்(று)
தோன்றவைமால்
காதுபவம் பத்தெடுத்துக் காட்
டினேன்."
(திருவெங்கையுலா)

இவ்வுலகின்கண் காணப்பட்ட பல்வேறு நாடுகளுள்ளும் நம் பரத கண்டமாகிய இந்தியா தேசமொன்றே வான் உடலைக் கண்டிக்கிறது. அதிலும், இந்தியாவின்தென்பாகத்திலேதான் புலால் மறுத்தல் அதி தீவிரமாகவும் உணர்ச்சியுடனும் கையாளப்பட்டு வருகிறது என்றால், நம் தாய்நாடாகிய தமிழ்நாட்டிற்கு இதைவிட வேறோர் தனிச் சிறப்பும் வேண்டுமோ! இவ்வகையில் நமக்குக் கிடைத்துள்ள தமிழ் இலக்கிய நூல்களிலே மிகவும் பழைய நூலாகக் காணப்பட்டு, முதன் முதலாகக் கொல்லாமையையும் ஊனுண்ணாமையையும் போற்றும் நூல் திருக்குறளேயாகும். இஃதோர் ஒப்பருந் தனிச் செப்பருஞ் சிறப்பன்றே! அங்ஙனமாயின் அக்கொள்கையைக் கூறி வலியுறுத்த முதலாக முன்வந்த அப்பெரியாரின் பெருமைதான் என்ன!

"உண்ணாமை யுள்ள துயிர்நிலை
யூனுண்ண
வண்ணாத்தல் செய்யா தளறு"

என்ற குறளை உரையாசிரியர்கள் தாப்பிசைப் பொருள்கோளுக்கு உதாரணமாக எடுத்துக்காட்டுவர். இக்குறளில் இன்னுமொரு நயமும் உண்டு. 'ஊனுண்ண வண்ணாத்தல் செய்யா தளறு' என்றதால் நரகங்கூட ஊனை உண்ணுவதற்கு வாயைத் திறவாது. ஏனெனில் தசையாலாகிய உடல் உலகிற் சுழன்று விழவும், சூக்குமமாகிய உயிரொன்றே நரகமடைவது உண்மையாகலின். எனவே, ஊன் தின்றழலும் வன்கணாளரின் வயிறு நரகைவிடக் கொடிது என்பது சொல்லாமலே விளங்கும்.

பெறுதற்கரியதொரு பெருநிதியாகிய திருக்குறள், தமிழுலகம் செய்த தவத்தாலும், நலத்தாலும் நமக்குக் கிடைத்திருக்கிறது. அதனைச் சிறப்பைக் கண்டு பிறநாட்டினரும் தத்தம் மொழிகளிற் பெயர்த்தெழுதிப் படித்தின்புறுகின்றனர். "கம்பன் பிறந்த தமிழ்நாடு" என்ற பாரதியாரும்,

"வள்ளுவன் தன்னை யுலகினுக்கே
தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு"
என்றார்.

இதனால் வள்ளுவர் திருக்குறளின் உலக வியாபகம் வெளியாகும். திருக்குறள் எழுந்த காலத்திற் [illegible]ன்பட்டுத் தோன்றிய நூல்களிலெல்லாம் வள்ளுவரின் குறட்பாக்கள் வளம்பெற எடுத்துக் கையாளப்பட்டிருக்கின்றன. கோவை, உலா, அந்தாதி, தூது, கலம்பகம் முதலிய பிரபந்தங்களிற் குறளடிகள் அப்படி அப்படியே காணப்படுகின்றன. ஒவ்வொரு பிரபந்தத்தின் இயல்பை எடுத்தோதும் இலக்கணத்தோடு குறளடிகையாளுதலையும் அவ்விலக்கணத்தின் ஓர் உறுப்பாகச் சேர்த்துவிடலாம் போன்றிருக்கின்றது. திருக்கைலாய ஞானவுலா, சீவக சிந்தாமணி, கம்பராமாயணம், திருவிளையாடற்புராணம், சிலப்பதிகாரம் முதலிய நூல்களிலெல்லாம் திருக்குறளடிகளும் கருத்துக்களும் அங்காங்கு காணப்பட்டுப் படிப்போர்க்கு உவட்டா விருந்தாய்ச் சுவை விளைக்கின்றன. திருவள்ளுவரைத் தமது இலக்கியத்திலிருந்து வேறு பிரிப்பது கூடாத காரியம். அவ்விதம் ஒருக்கால் பிரித்தாலுங்கூட, தசைகள் கழிந்த எலும்புக்கூடு போன்றே தமிழ் இலக்கியம் காணப்படும். ஆகவே, திருக்குறள் தமிழ் மொழிக்கே சிவகாடியாயச் செம்மையளிக்கின்றது. இதனாற்றே, நாம் உய்ந்ததிற்றுணை நின்ற புத்தேரிப் புலவரும்,

"வள்ளுவர் தந்த திருமறையைத்
—தமிழ்
மாதின் இனிய உயிர்நிலையை
உள்ளம் தெளிவுறல் போற்றுவ
மே—என்றும்
உத்தம ராகி யொழுகுவமே"

என்று கனிவுறப் பாடியுள்ளார்.

—தமிழ்ப்பொழில்.

## பணக்காரர் உபயோகிக்கும் திறம் அரிசி

### அரிசிக் கடைகளில் விற்கப்படும்

### கொழும்பு நகரசபையில் தீர்மானம்

கொழும்பு, மார்ச், 3—

நகரில் அரிசிக் கட்டுப்பாட்டுத் திட்டம் வேலைசெய்வதுபற்றிப் பரிசீலனைசெய்வது பற்றிப் பரிசீலனை செய்து அறிக்கை செய்வதற்கு ஒரு விசாரணைச்சபையை நியமிக்கும்படி கேட்டு நாளை நடைபெறும் கொழும்பு நகரசபைக் கூட்டத்தில் ஒருதீர்மானங் கொண்டுவரப்படவிருக்கிறது.

அரிசிக்கட்டுப்பாடு விஷயமாக வரி செலுத்துவோருக்கிடையில் அதிருப்தி ஏற்பட்டிருக்கிறதென்றும் வரி செலுத்துபவர்களை திருப்தி செய்வதற்கு எவ்வித நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்பதுபற்றி அறிக்கை செய்வதற்கு ஒரு நிர்வாகசபை நியமிக்க வேண்டுமென்றும் குறித்த தீர்மானத்திற் சொல்லப்படுகிறது. சில பணக்காரர்களால் உபயோகிக்கப்படும் அதிகவிலையுள்ள இறக்குமதி செய்யப்படும் அரிசி ரகங்களை இனிமுதல் கூப்பன்களைக்கொடுத்துப் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருக்குமென்று அறியப்படுகிறது. இந்தரகமான அரிசி படியொன்று 36 சதமாகவும் 1-ம் நம்பர் முத்துச்சம்பா அரிசியின்விலை $21\frac{1}{2}$ சதமாகவும் இன்று விற்பனை செய்யப்படும்.

நேற்று உணவுக் கட்டுப்பாட்டுப் பகுதியார் முத்துச்சம்பா அரிசிக்கும் மிலசாட் அரிசிக்கும் ஒரேமாதிரியானவிலையை நிர்ணயித்ததன் பலனாக இதுவரைகாலம் ஏனைய அரிசி ரகங்களைககாட்டிலும் கூடுதலானவிலைக்கு விற்பனை செய்யப்பட்ட முத்துச்சம்பா அரிசிக்கு மிகுந்த பிரியம் ஏற்படுமென்று எதிர்பார்க்கப் படுகிறது.

முத்துச்சம்பாவுக்குக் கூடுதலான பிரியம் ஏற்படுமென்று எதிர்பார்த்து உணவுக்கட்டுப்பாட்டு அதிகாரிகள் நகரிலுள்ள அரிசிக்கடைகள் எல்லாவற்றிலும் போதிய கையிருப்பு இருப்பதற் கேதுவான விசேஷ ஒழுங்குகளைச் செய்திருக்கின்றனர். அதனால் இந்த ரகமான அரிசி கையிருப்பில இருக்கும்வரை குறிப்பிட்ட அந்த அரிசியை உபயோகிப்பவர்களுக்கு "சப்ளை" கிடைக்கக் கூடியதாக இருக்கும்.

## தெஹிவளைப் பட்டின சபைச் சிப்பந்திகளுக்கு வாராந்தச் சம்பளம்

அடுத்த செவ்வாய்க்கிழமை நடைபெறவிருக்கும் தெஹிவளை கல்கிசை பட்டினசபைக் கூட்டத்திற் பின்வரும் தீர்மானத்தை மிஸ்றர். வி. டப்ளியூ. எப். பெரேரா கொண்டுவரவிருக்கிறார்.

தமது சம்பளத்தை வாராவாரம் பெறவிருக்கும் பட்டினசபைச் சிப்பந்திகளுக்கு வாராந்தச் சம்பளங்களை வழங்கவேண்டுமென்று இச்சபை அபிப்பிராயப்படுகிறது.

## யாழ்ப்பாணம் பெரியகடை

### பொருள்கள் விலை

| | | | |
|---|---|---|---|
| ஊர்நெல்லு புசல் | | | ...... |
| சின்னரிக்கன் (மூடை) | | 8 | 95 |
| சிறட்டு | ,, | 8 | 95 |
| கடுகுசின்னு | ,, | 8 | 95 |
| முத்துச்சம்பா அரிசி புசல் | | 6 | 28 |
| கல்லுண்டை | ,, | 6 | 28 |
| ரூஸ் | ,, | 6 | 28 |
| முழுப்பச்சை | ,, | 6 | 28 |
| குறணைப் பச்சை | ,, | 6 | 28 |
| குத்தரிசி | ,, | | |
| ஊர் அரிசி | ,, | | |
| மிளகாய் இருத்தல் | | | $27\frac{1}{2}$ |
| மல்லி | ,, | | $15\frac{1}{2}$ |
| மிளகு | ,, | | 28 |
| சீரகம் | ,, | | 53 |
| கடுகு | ,, | | 32 |
| வெந்தயம் | ,, | | $13\frac{1}{2}$ |
| உள்ளி | ,, | | 42 |
| சோம்பு | ,, | | $21\frac{1}{2}$ |
| மஞ்சள் | ,, | | $15\frac{1}{2}$ |
| சுக்கு | ,, | | 53 |
| உழுந்து | படி | | 28 |
| பயறு | ,, | | 28 |
| கடலை | ,, | | |
| பருப்பு (துவரை) | ,, | | 24 |
| ,, (கடலை) | ,, | | 25 |
| ,, (உழுந்து) | ,, | | 25 |
| கோதுமைமா இருத்தல் | | | $15\frac{1}{2}$ |
| ரவை | | | |
| சர்க்கரை (வேலூர்) இருத்தல் | | | 14 |
| ,, (ஜாவா) | ,, | | |
| சீனி (கிறேப்) | ,, | 18— | 19 |
| சீனி (மா) | ,, | | 36 |
| கற்கண்டு | ,, | | 34 |
| கோப்பி 1-வது | ,, | | 64 |
| ,, 2-வது | ,, | | |
| தேயிலை 1-வது | ,, | 2 | 00 |
| ,, 2-வது | ,, | | 75 |
| சிகைக்காய் | ,, | | 14 |
| வெண்காயம் | ,, | | 5 |
| பம்பாய் வெங்காயம் | ,, | | 10 |
| உருளைக் கிழங்கு | ,, | | 13 |
| புளி (குத்து) | ,, | | 8 |
| உப்பு | ,, | | $4\frac{1}{2}$ |
| நெருப்புப்பெட்டி டசின் | | | 22 |
| தேங்காய் நெய் போத்தல் | | | 30 |
| எண்ணெய் டடி | | | 56 |
| தேங்காய் 100 | | 6 | 00 |
| விறகு தூக்கு | | 1 | 60 |
| முழுப் பவுண் | | | |
| அரைப் பவுண் | | | |
| வெள்ளி ரூபா எடை | | | |
| கர்ப்பூரம் (விளைவு) | ,, | | |
| ,, (பாக்கெற) | ,, | | 14 |
| நெய் (தகர) இரு | | | |
| கரோசின் தைலம் (மண்ணெண்ணெய்) போத்தல் | | | 17 |
| கலன் | | | 90 |

விலை குறிக்கப்படாத பொருள்கள் இப்பொழுது பெரியகடையில் கிடைகாதனவும் விலைஸ்திரமில்லாதனவுமாகும்.

## 70 வயதுக் கிழவியின் பரிதாப மரணம்

### மோட்டார் விபத்தின் விளைவு

ரத்மலானையைச் சேர்ந்த சிஸிலியா ஹாமி என்னும் 70 வயசான கிழவி சென்ற வெள்ளிக்கிழமை பிற்பகல் ரத்மலானையைச் சேர்ந்த காலிரோட்டில் ஒரு மோட்டார் வானால் மோதி வீழ்த்தப்பட்டு நேரிக்கப்பட்டாள். இவ்விபத்தின்காரணமாகக் குறித்தமாது மரணமானாள்.

மரண விசாரணையின் போது ரோயல் கடற்படையைச் சேர்ந்த ஓர் அதிகாரி சாட்சியங் கூறும்போது தான் வானின்முற்புற ஆசனத்தில் அமர்ந்திருந்ததாயும் மற்றொரு கடற்படை அதிகாரி வாகனத்தைச் செலுத்தியதாகவும் தெரிவித்தார். காலஞ்சென்றமாது திடீரென்று பாதையைக்கடந்து வானின் ஒரு பக்கத்திற் மோதினாளென்றும் அவர் கூறினார்.

அகஸ்மாத்தாக விபத்திற் குள்ளாகியதாலே மரணமேற்பட்டதெனத் தீர்ப்பளிக்கப் பட்டது.

## சிறு நோட்டுகளை வாங்க மறுப்பவர்கள்

### தண்டிக்கப் படுவார்கள்

புதிய 50 சத நோட்டுகளையும் 25 சத நோட்டுகளையும் சட்டபூர்வமான செல்லும் நோட்டுகளாக ஒப்புக்கொள்ள மறுக்கும் வியாபாரிகள் கடைக்காரர்கள் போக்குவரத்துச் சாதனங்களை வைத்திருப்போர் முதலியோர்மீது பொலீஸார் இப்பொழுது நடவடிக்கை எடுத்துவருகிறார்கள்.

இது சம்பந்தமாக முறைப்பாடு செய்யப்படும்வரை காத்திருக்காமல் உடனே சம்பந்தப்பட்ட சம்பவங்களை விசாரணைசெய்து குற்றவாளிகளைத் தண்டனைக் குள்ளாக்கும்படி பொலீஸார் கேட்டுக்கொள்ளப் பட்டிருக்கிறார்கள்.

## "மூலப்பொருள் இருக்கிறது; ஆள் பலம் போதாது"

### டக்டர். கோயபல்ஸின் உபதேசம்

இந்த யுத்தம் சம்பந்தமாக எமதுள்ள மனோபாவத்திற் பரிபூரணமான மாற்றம் ஏற்படவேண்டுமென்று ஜேர்மன் பிரசார மந்திரியான கோயபல்ஸ் ஒரு கட்டுரையில் எழுதியிருக்கிறார். ஜேர்மன் மக்களுக்கு உபதேசிக்கும் முறையில் எழுதப்பட்ட குறித்தகட்டுரை சென்ற ஞாயிற்றுக்கிழமை இரவு ஜேர்மன் றேடியோவால் ஒலிபரப்பப் பட்டது.

கோயபல்ஸ் தமது கட்டுரையில் மேலுங் கூறுவதாவது:—

"நாம் யுத்தத்தைக் குறித்துக் குறைவாகப்பேசிக் காரியத்தைக் கவனிப்போம். காலத்தை வீணாக்காமல் நமது வேலையைச் சரியாகக் கவனித்தால் இந்த யுத்தத்தில் வெற்றிபெறுவோம்.

மிகக் கூடுதலான தளவாடங்களை உற்பத்தி செய்வதற்குவேண்டிய மூலப் பொருள்களுக்குப் பஞ்சமில்லை. ஆள்பலம் ஒன்றுதான் குறைவாக இருக்கிறது. நாம் எமது 1939-ம் வருடத்திய வாழ்க்கை நிலைமைக்கு மீளவும் செல்வதற்காக மாத்திரம் நாம் யுத்தத்தில் வெற்றிபெற வேண்டுமென்பதில்லை. ஆயின், தேசமக்களனைவரதும் வாழ்க்கையை அந்த நிலைமைக்கு உயர்த்துவதற்காக நாம் யுத்தத்தில் ஜெயிக்கவேண்டும்.

## தாய்மீதும் மகள்மீதும் வழக்கு

### கர்ப்பவதியாயுள்ள மகளுக்குக்கட்டளைமறுப்பு

7-3-42

தெல்லிப்பளை வடக்கில் வசிக்கும் இன்னாசிப்பிள்ளை யோசேப் என்பவர் ஸ்ரீமதி. J. நேசம்மா மீதும் இருபத்தொரு வயதுடைய அவளுடையமகள் மூரி-பஸ்தியாம்பிள்ளைமீதும் ஒரு முறையீட்டை யாழ்ப்பாணம் நீதிபதி மிஸ்றர். குக்டன் பேர்ணன்டோவிற்குச் செய்திருந்தார். அம்முறையீட்டில் இரண்டாம பிரதிவாதியாகிய ஸ்ரீமதி. மூரி-பஸ்தியாம்பிள்ளைக்கு இப்போது 21 வயதென்றும் அவள்ஒன்பது மாசகாலமாகத் தமது வைப்பாட்டியாக விருந்தாரென்றும் இப்போது அவள் மூன்றுமாதக் கர்ப்பவதியாயிருந்தாயும் அவளை இவளுடைய தாயாராகிய ஸ்ரீமதி. J. நேசம்மா தமதுமகளை அவளுடைய விருப்பத்திற்குமாறாகப் பயமுறுத்தித் தம்மோடு (பேரசேப்புடன்) தடுத்து வைத்துக் கர்ப்பத்தைச் சிதைக்க உத்தேசித்திருப்பதாயும் பின்னர் அவளை வேறொருவருக்கு விவாகஞ் செய்துகொடுக்க யோசித்திருப்பதாயும் கூறப்பட்டிருந்தது. இம்முறையீடு கோட்டில் விசாரணைக்கெடுக்கப்பட்டது. முதலாம் பிரதிவாதி கோட்டில் சமுகமாயிருந்தாள்.

பிரதிவாதிகட்காக ஏற்பட்ட மிஸ்றர். R. R. நல்லையா "முதலாம்பிரதிவாதியின்மகள் இரண்டாம பிரதிவாதி கோட்டிற் சமுகமாயில்லை. இப்போது இரண்டாம் பிரதிவாதி முதலாம் பிரதிவாதியோடு வசித்து வருகிறாள். ஆகையால் முதலாம் பிரதிவாதி இரண்டாம் பிரதிவாதியைக் கோட்டிற்குக் கூட்டிவரவில்லை. மேலும், வாதி விவாகஞ் செய்தவர். அவருக்குப் பிள்ளைகளுண்டு என்று தெரிவித்தார்.

நீதிபதி இம்முறையீட்டால் தாம் அதில் தலையிட்டுக் கட்டாயம் இரண்டாம் பிரதிவாதியைக் கோட்டிற் சமுகமளிக்கும்படி செய்யவேண்டுமென்று முதலாம் பிரதிவாதிக்குக் கட்டளையிடப் போதிய நியாயமில்லையெனக் கூறி மேலும் வாதிவிரும்பினால் சுப்பிறீம் கோட்டாருக்கு மனுச்செய்து கொள்ளும்படியுங் கூறினார்.

வாதிக்காக ஏற்பட்ட மிஸ்றர். V. M. சரவணமுத்து இரண்டாம் பிரதிவாதிக்குக் கட்டளையிட்டுக் கோட்டிற்கு அழைக்க உத்தரவைக் கேட்டார். அது மறுக்கப்பட்டது.

ந. ரீ.

## பர்மாவிலிருந்து வெளியேறும் இந்தியர்களின் கஷ்டம்

லக்ஷ்மணபுரி, மார்ச், 3உ

அகில இந்திய இந்துமகாசபைக் காரிய நிர்வாகசபை அங்கத்தவர் கன்வர்சந்தசரண் சாரதாப்பத்திரிகைக்கு வெளியிட்டுள்ள ஓர் அறிக்கையிற் பர்மாவிலிருந்தும் அஸ்ஸாமிலிருக்கும் வெளியேறி வருவோர்களிற் பலரை நான்கண்டு பேசினேன். இவர்கள் கத்தியவாருக்கும் ராஜபுதனத்துக்கும் செல்பவர்கள். இவர்களுடைய கஷ்டம் விபரிக்க முடியாதது. தரைமார்க்கமாகவரும் இவர்கள் மலைகளிலுங் காடுகளிலும் படுந்துன்பஞ் சொல்லுந் தரத்ததன்று. தங்கள் உயிரையும் உடமையையும் பாதுகாக்கப் போதிய ஏற்பாடுகள் செய்யவில்லையென்றும், ஆகாரத்துக்குத் தண்ணீருக்குக்கூட ஒருவசதியுஞ் செய்யப்படவில்லையென்றும் அவர்கள் கூறுகின்றனர். சான்பூரிலுள்ள புகைரத அதிகாரிகள்மிகவும் அசிரத்தை காட்டி வருகின்றனர். இவர்கள் சற்று அநுதாபத்தோடு நடந்துகொள்ள வேண்டும். வெளியேறி வருபவர்களுக்கு அதிகவசதிகள் அளிக்கும்படி வெளிநாட்டு இந்தியர் இலாகா அங்கத்தவர் ஸ்ரீ ஆனேயைக் கேட்டுக்கொள்ளுகிறேன் என்றார்.

### 1942-ம் ஆண்டின் 1-ம் இலக்க யுத்த அபாய (சாமான்) வீமாத்திரும் (இன்சூரன்ஸ்) சட்டம்

1942-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 23-ந் தேதியன்று பிரகடனப்படுத்திய சட்டத்தின்படி நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டிருக்கும் யுத்த அபாய (சாமான்) வீமாத்திரும் திட்டத்தைச் சனங்கள் கவனிக்குமாறு கேட்கப்படுகிறார்கள். இதன்படி விற்பனைக்காக அல்லது விநியோகஞ் செய்வதற்காக லங்கையில் தரையிலேனும் உள்நாட்டுநீரிலேனும் சில சாமான்களுக்கு யுத்த அபாயத்துக்காக நஷ்டஈடு கொடுக்க அரசாங்க உத்தரவாதம் அளிக்கிறது. இத்திட்டத்தின் முழு விபரங்களும் 1942-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 23-ந் தேதியைக் கொண்ட 8870-ம் இலக்க விசேஷ அரசாங்க கெசற் பத்திரிகையில் காட்டப்பட்டிருக்கின்றன.

2 சட்டத்திலுள்ள அட்டவணையில் விவரித்துக் காட்டிய சாமான்களைத் தவிர, இலங்கையிலுள்ளனவும், விற்பனைக்காக அல்லது விநியோகத்துக்காகச் சொந்தக் காரர்களால் வைக்கப் பட்டுள்ளனவுமான சகல சாமான்களும் வீமாத் திரப்பட வேண்டும். இந்தத் திட்டம் கட்டிடங்களுக்கும், வேறு மாதிரியான அசைவற்ற ஆதனங்களுக்கும் ஏற்புடைத்தாகாது.

3 வியாபாரியாக அல்லது விநியோகஞ் செய்பவராகத் தொழில் நடத்தும் ஒருவர் அவருடைய சாமான்களின் விலைமதிப்பு 10,000 ரூபாவுக்கு மேற்படுமேனால், அச்சாமான்களின் முழு விலைமதிப்புக்கு இத்திட்டத்தின்படி வீமாத்திர வேண்டிய அவருடைய சாமான் முழுவதையும் 1942-ம் ஆண்டு மார்ச் மீ 23-ந் திகதிக்கு முன்பதாக வீமாத்திர வேண்டும். இதை மீறி நடந்தால் கடினமான தெண்டம் விதிக்கச் சட்டத்தில் ஏற்பாடு உண்டு.

4 இலங்கையில் இத்திட்டத்தின்படி வீமாத்திரவேண்டிய கையிருப்புச் சாமான்களின் விலைமதிப்பு 10,000 ரூபாவுக்கு மேற்படாமலுள்ள, சாமான் வியாபாரியாக அல்லது விநியோகஞ் செய்பவராகத் தொழில் நடத்தும் ஒருவர் தாம் விரும்பினால் வீமாத் திரலாம்.

5 சாமான்கள் கையிருப்பு 10,000 ரூபாவுக்கு மேற்பட உள்ளவர்கள் இத்திட்டத்தின்படி ஒப்பந்தச் சீட்டுக்களைக் காக்க நியமிக்கப்பட்ட அரசாங்க ஏஜன்றர்களில் ஒருவருக்கு தமதமின்றி எழுத வேண்டும். இந்த ஏஜன்றதேவையான மாதிரிப் பத்திரங்களை அளிப்பார். ஒரு வீமாக்கொம்பனியுடன் நிலபத்துக்கெதிராகச் சாமான்கள் வீமாத்திரப்பட்டிருந்தால், அந்தக் கொம்பனி மூலமே யுத்த அபாய (சாமான்) வீமாத்திருவது மிகவும் நல்ல தெனச் சிபார்சு செய்யப்படுகின்றது. ஏஜன்றமார்களின் அட்டவணை பொன்று 1942-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 23-ந் தேதியைக் கொண்ட 8870-ம் இலக்க கெசற் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டது, பிரதிகள் இக்கச்சேரிக் கொழுதிப் பெற்றுக் கொள்ளலாம். இதன் பிரதிகள் கச்சேரிகளிலும் தபாற் கந்தோர்களிலும் விளம்பரஞ் செய்யப்பட்டிருக்கின்றன.

6 1942-ம் ஆண்டின் 1ம் இலக்க யுத்த அபாய (சாமான்) வீமாத்திரும் சட்டத்தின் பிரதிகள் கொழும்பு அரசாங்க சாசன விற்பனையாளரிடம் (Government Record-KeeperColombo] ஒரு கொப்பி 25 சதம் வீதமும் தபாற் செலவு 6 சதமாகவும் பெறலாம். 1942-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 23-ந் தேதியைக் கொண்ட 8870-ம் இலக்கவிசேஷ கெசற் பத்திரிகைப் பிரதிகள் 20 சதவீதமும் தபாற் செலவு 6 சதவீதமாகவும் அத்த விலாசத்திற் பெற்றுக் கொள்ளலாம்.

H. C. Cocks
யுத்த அபாய வீமாத்திரும் கொமிஷனர்
செக்கிறிறேறியற் கட்டிடம்
தபாற் பெட்டி 500. கொழும்பு

G37 5 — 11- 3. 42


### திருநெல்வேலி ஒற்றுமை நிதி (வரைவுளது)

அதிகாரம் பெற்ற மூலதனம் ரூபா 500,000.
ஒன்று 25 சதமாக 80 மாதங்கள் செலுத்தி ரூபா 25ம் ஆதாயமும் பெறலாம்
வங்கித்தொழிலும் வியாபாரமும் இலாபகரமாய் நடக்கின்றன.
தேசியகருமங்களை வளர்ப்பதால் சுயேச்சைபெறமுடியும்.
இலகுவான முறையில் இறுக்கக்கூடிய கடன்கள் கொடுக்கிறோம்.
உயர்ந்த வட்டி விகிதங்களோடு தவணைக்கும் நிபந்தமாயும், சம்பாத்தியத்திலும், நடைக்கணக்கிலும் பணம் ஏற்றுக்கொள்வோம்.
பங்குகளுக்கு முந்துங்கள்!
வ. சோமசுந்தரம்,
காரியாதிகாரி.

(வி) (Y. 164. 1-11-41 to 31-10-42)

### குயீன்பிறுண்ட் (அரசி அடையாள) ஓடுகள்

குறைந்த விலை நிறைந்த குணம்
எங்கும் பெயர்பெற்ற, உறுதிவாய்ந்த ஊறுத, நல்ல சத்தமுள்ள யாவரும் விரும்பும் அழகிய ஓடுகள்.
இ. சுந்தரமூர்த்தி, (Sole Agent)
பெரியகடை, யாழ்ப்பாணம்.
c/o S. Veeragathipillai & Sons.

( Y. 164 11-8-51—10-8 42 ) வி

### வடமாகாண ஆசிரியர் சகாயநிதிச் சங்கம்

1933-ம் ஆண்டு தொடக்கப் பெற்றது
அரசினரால் பதிவு செய்யப்பட்டது
அங்கத்தவர்கட்டணப்பணம் மாத்திரம் 45000 ரூபாவிற்குமேலிருக்கிறது
30 வயதுக்குட்பட்ட ஒவ்வொரு ஆசிரியரும் அங்கத்தினராய்ச் சேரலாம். மாதக்கட்டண விகிதம்:-
1-ம் வகுப்பு ரூ. 4-00 2-ம் வகுப்பு ரூ. 2-00
3-ம் வகுப்பு ரூ. 1-00
தேவையான விபரம் எம்மிடம் அறிந்து கொள்ளலாம்
ச. போ. இராசையா
காரியதரிசி,
வடமாகாண ஆசிரியர்சகாயநிதிச்சங்கம்
யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி வண்ணார்பண்ணை
H 145 1-12-41—31-5-42

### பிரிட்டனிலிருந்து சாமான்கள்!

புதிதாகக் கப்பலில் வருகின்றன...
மூக்குக் கண்ணாடி பிறேம்கள், கண்ணாடிகள், பல்கட்டுவதற்குத் தேவையான சாமான்கள்
செயற்கைப் பற்கள்
பிளாஸ்றர் ஒவ் பாரிஸ் றுத்தல் ஒன்று ரூ. 1-50
"டூரெக்ஸ்" கிளினிக்கல் தேமோமீற்றர்கள் (சரியானவை நீடித்தகாலம் உபயோகிக்கத் தகுந்தவை என்பனவற்றிற்கு உத்தரவாதம்)
ஒன்று ரூ 2-50
பத்திராணு & சன்.
3-ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.
Q. 115. 23-1.42 – 22-4.42.

### சி. எம். சாமி மன்மதக் குளிகை

மிகுந்த பலத்தையும் ரத்த விருத்தியையும் உண்டாக்கும்
அநேக பரிசுகள் பெற்று, உலகெங்கும் புகழப்பட்டது;
இதற்கு நிகரான ஔடதம் வேறில்லை
ஒரே குளிகையில் பரீட்சிக்கலாம்
இழந்த சக்தியும் பலமும் திரும்ப வரும்; நல்ல ஜீரணம், ரத்த விருத்தி, சரீரக்கட்டு, தேகபுஷ்டி, வாலிபசக்தி, இவற்றைத்தரவல்லது. எவ்வித பலஹீனம், இடுப்புவலி, உஷ்ணரோகங்கள் நீக்கும். ஒரு முறை பரீட்சித்தவர்களுக்கு இதன் அருங்குணம் விளக்கும். கேட்லாக்கிற்கு எழுதுங்கள்,
அர்கியகாட்டார் முன்பண மனுப்ப வேண்டும்.
60 குளிகைரூபா 5 20 குளிகை ரூபா 2
தலைமை ஆபீஸ்:-
மலையப்பசாமி வைத்தியசாலை பழனி
கிளை ஆபீஸ்:-
1 மலையப்பசாமி வைத்தியசாலை சிந்தாதிரிப்பேட்டை மதராஸ்
2 மலையப்பசாமி வைத்தியசாலை 143 செட்டியார்தெரு கொழும்பு
3 மலையப்பசாமி வைத்தியசாலை வண்ணார்பண்ணை கதிரேசன் கோவிலடி யாழ்ப்பாணம்
Y 221 31-3-41 30-3-42



### விளம்பர விகிதம்

முதன்முறைக்கு
ஒருகலம் ரூபா 10-00 அரைக்கலம் ரூபா 5-00
கால்கலம் ரூபா 4-00 ஒரு அங்குலம் ரூபா 1-00
அடுத்த முறைகட்கு மேற்படி விகிதங்களிற் பாதி
காலம் குறித்த விளம்பரங்கள் விசேஷ விளம்பரங்கள் விஷயத்தில் மனேஜரிடம் சேர்ந் கண்டேனும் எழுதியும் மூலமாகவேனும் ஒழுங்கு செய்யலாகும். உடன்பணம் அனுப்பப்படா விளம்பரங்கள் ஏற்கப்படமாட்டா.

### பத்திரக்கிரயம்

வருஷம் ஒன்றுக்கு யாழ்ப்பாணப்பட்டினசபை எல்லைக்குள்
தமிழ் ரூபா 5-00 இங்கிலீஷ் தமிழும் 9 00
இலங்கை இந்தியா 8-00 இங்கிலீஷ் தமிழும் 12-00
ஐரோப்பா பகுதி 9-00 இங்கிலீஷ் தமிழும் 13-00
தனிப்பிரதி சதம் 5
முற்பணமாக அனுப்பப்படல் வேண்டும்


வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ்சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by S. ADCHALINGAM residing at Vannarponnai East, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabai Jaffna, at their Press, the Saiva PrakasaPress Vannarponnai, Jaffna. on Thursday 12th March 1942